Registered as a Newspaper பக்கங்கள் 06 விலை: ரூபா 5.00

ஈழநாதம்

THE EELANAATHAM மக்கள் தினசரி PEOPLES DAILY

நாதம் 5 திருவள்ளுவர் ஆண்டு 2025 கார்த்திகை 12 28 - 11 - 94 திங்கட்கிழமை ஓசை 283

## மாவீரர் சோலை சேமிப்புத்திட்டம் மாவீரர் நாளில் அறிமுகம்

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தினரின் கிராமிய நிதியத்தால் நேற்று மாவீரர் சோலை சேமிப்புத் திட்டம் அறிமுகம் செய்யப்பட்டது. யாழ் மருத்துவபீட மைதானத்தில் நடைபெற்ற மாவீரர் நாள் கூட்ட மேடையில் வைத்து இத்திட்டம் அறிமுகம் செய்துவைக்கப்பட்டதுடன் யாழ் மாவட்ட சிறப்புத் தளபதி திரு. செல்வ ராசா இதனை ஆரம்பித்துவைத்தார். இருவருக்கு இச்சேமிப்பு திட்டப் பத்திரத்தினை அவர் வழங்கினார். எதிர்கால தலைவர்களான குழந்தைகளின் எதிர்காலத்திற்கு உதவி புரியத்தக்க வகையில் இம் மாவீரர் சோலைத்திட்டம் அறிமுகப்படுத்தப் பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## புலிக்கொடி தாங்கிய தரைப்படை முன்சென்றது

(யாழ்ப்பாணம்)

புலிக்கொடி உயரக்கையில் ஏந்தி, பாண்ட் வாத்திய இசை முழங்க விடுதலைப் புலிகளின் தரைப்படை முன்னே அணிவகுத்துச்செல்ல நேற்று மாலை அணி நடை ஆரம்பமானது.

மாவீரர் தினமான நேற்று யாழ் இலுப்பையடிச் சந்தியில் ஆரம்பமான இந்த அணிவகுப்பு மாவீரர் தினக்கூட்டம் நடைபெறும் இடமான யாழ். மருத்துவபீட மைதானத்தைச் சென்றடைந்தது.

விடுதலைப் புலிகளின் தரைப்படை. விடுதலைப் புலிகளின் கடற்படை, காவல் துறை, காந்தரூபன் அறிவுச்சோலை மாணவர்கள், விடுதலைப் புலிகள் மாணவர் அமைப்பினர், பாடசாலை மாணவர்கள் கொண்ட தனித்தனி அணிவகுப்புகள் இடம் பெற்றன.

கடற்படையின் அணிவகுப்பில் ஆண்-பெண் போராளிகளும் ஈடுபட்டனர். இவர்கள் கைகளில் ஆயுதம் ஏந்தி அணிவகுப்பில் ஈடுபட்டனர்.

மூன்றாவதாக காவல்துறையினர் ஆயுதம் ஏந்திய படி அணிவகுப்பில் ஈடுபட்டனர். அடுத்து காந்தரூபன் அறிவுச் சோலை மாணவர்கள் அணிவகுப்பில் ஈடுபட்டனர். பச்சைநிறத் தொப்பியுடன் நீல நிற நீளக் கால் சட்டையும் வெள்ளைநிற மேலாடையும் இவர்கள் அணிந்திருந்தனர்.

விடுதலைப் புலிகளின்

(6 ஆம் பக்கம் பார்க்க)



மாவீரர் தினத்தை முன்னிட்டு தேசியத் தலைவர் பிரபாகரன் புலிகளின் படை முகாம் ஒன்றில் நினைவுச் சுடர் ஏற்றுவதை முதலாவது படத்திலும், மௌன அஞ்சலி செலுத்துவதை இரண்டாவது படத்திலும் காணலாம்.

# மாவீரர் நாள் நேற்று எழுச்சிகர அனுஷ்டிப்பு; அஞ்சலிசெலுத்த அலையெனதிரண்டமக்கள்

## வீடுகள் எங்கும் மாவீரர் சுடரொளி

(யாழ்ப்பாணம்)

தமிழீழ விடுதலைப் போரில் வீரச்சாவடைந்த விடுதலைப் புலிகள் இயக்கப் போராளிகள் நினைவாக அனுஷ்டிக்கப்படும் மாவீரர் நாள் நேற்று தமிழீழம் எங்கும் உணர்ச்சி பூர்வமாக அனுஷ்டிக்கப்பட்டது. நேற்று அதிகாலை 12 மணி ஒரு செக்கனுக்கு நினைவொலி எழுப்பலுடன் ஆரம்பமான இம் மாவீரர் நாள் நிகழ்ச்சிகள், மாலை யாழ். பல்கலைக்கழக மைதானத்தில் இடம்பெற்ற மாபெரும் பொதுக்கூட்டத்துடன் நிறைவுபெற்றது. இம் மாவீரர் நாளில், தமிழீழ மக்கள் அனைவரும் உணர்வுபூர்வமாகப் பங்கேற்ற அதே வேளை பல்லாயிரக்கணக்கான மக்கள் மாவீரர் நாள் நிகழ்வுகளில், நேரடியாகப் பங்கேற்று மாவீரர்களுக்கு அஞ்சலி செலுத்தினர்.

நள்ளிரவு பன்னிரண்டு மணி ஒரு செக்கனுக்கு சகல ஆலயங்களிலும் தேவாலயங்களிலுமுள்ள மணிகள் இடைவிடாது இரண்டுநிமிடநேரம் ஒலிக்க மக்கள் எழுந்து நின்று மௌன அஞ்சலி செலுத்தலுடன் மாவீரர் நாள் நிகழ்வுகள் ஆரம்பமாகின.

சரியாக பன்னிரண்டு மணி இரண்டுநிமிடத்திற்குகோட்டரீதியாக உள்ள மாவீரர் துயிலும் இல்லங்களில் திரண்டிருந்த மாவீரரின் பெற்றோரும் உறவினரும் போராளிகளும் மாவீரரின் நினைவுக்கற்களுக்கும், கல்லறைகளுக்கும் முன்னால் சுடரேற்றினர். இதேவேளை அனைத்துப் பகுதிகளிலுமுள்ள வீடுகள், ஆலயங்கள், வர்த்தக நிலையங்கள், அரச, தனியார் நிறுவனங்கள் பொது இடங்களிலும் மாவீரர் நினைவுச் சுடர்கள் ஏற்றி வைக்கப்பட்டன.

இதனையடுத்து பெருமளவு மக்கள் சாரிசாரியாக சென்று பல்வேறு வடிவங்களிலும் வீதிகளில் ஏற்றிவைக்கப்பட்டிருந்த ஒளிச்சுடர்களை பார்வையிட்ட வண்ணம் சென்றனர். இதனால் இரவு முழுவதும் வீதிகளில் மக்கள் நடமாட்டம் காணப்பட்டது. மேலும் ஒளிச்சுடரேற்றப்பட்ட பின்னரும் மாவீரர் துயிலும் இல்லங்களுக்கு மக்கள் சென்று மாவீரர்களுக்கு அஞ்சலி செலுத்திய வண்ணம் இருந்தனர்.

நேற்று மாலை இலுப்பையடிச் சந்தியிலிருந்து அணி நடை பவனி பொதுக்கூட்டம் நடைபெற்ற யாழ். மருத்துவ பீட மைதானம் வரை நடைபெற்றது. இதனைப் பார்வையிட பெருமளவு மக்கள் வீதியின் இருமருங்கிலும் திரண்டிருந்தனர். அணி

(5 ஆம் பக்கம் பார்க்க)

## பல்லாயிரக்கணக்கான மக்கள் பல்கலை. மைதானத்தில் திரண்டனர்

மாவீரர் தினமான நேற்று யாழ். பல்கலைக்கழக மருத்துவபீட மைதானத்தில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் பல்லாயிரக்கணக்கான பொதுமக்கள் அலை அலையாக திரண்டுவந்து கலந்து கொண்டனர்.

நேற்று மாலை மேற்படி மைதானத்தில் நடைபெற்ற அணிவகுப்புநிகழ்வை அடுத்து மாபெரும் பொதுக்கூட்டம் அங்கு நடைபெற்றது.

பலமைல் தூரத்திலிருந்து, ஆண்கள், பெண்கள், சிறுவர் என பல்லாயிரக்கணக்கானோர் இந்நிகழ்வில் கலந்துகொண்டதை அவதானிக்க முடிந்தது.

மைதானம் மக்கள் வெள்ளத்தால் நிரம்பியிருந்தது. மற்றும் கட்டடங்கள், மதில்கள் ஆகியவற்றிலும் பொது மக்கள் ஏறிநின்று அவதானித்ததை காணக்கூடியதாக இருந்தது.

மஞ்சள் வர்ணக் கம்பங்கள் மைதானத்தைச் சுற்றி நாட்டப்பட்டிருந்தன. அவற்றின் உச்சியில் சிவப்பு, மஞ்சள் வர்ணக் கொடிகள் அசைந்து கொண்டிருந்தன.

சுற்றிவர பல வர்ண மின்குமிழ்கள் பொருத்தப் பட்டு வெளிச்சம் பரப்பப்பட்

(5ஆம் பக்கம் பார்க்க)

## ஒருபுறம் சமாதானம் பற்றிப் பேச்சு; மறுபுறம் இராணுவ விரிவாக்க முயற்சி

### அரசு குறித்து தமிழ்ச்செல்வன்

ஒரு பக்கம் தமிழர்களுக்கு உரிமைகள் வழங்குகின்றோம் என்று சொல்லிக் கொண்டு ஒருபக்கம் இராணுவத்தை பலப்படுத்தி எம்மை இராணுவ ரீதியாக அச்சுறுத்தி ஒரு தீர்வுக்கு கொண்டு வரலாம் என சிங்கள அரசு எண்ணிக் கொண்டிருக்கிறது என நினைக்கின்றேன்.

இவ்வாறு நேற்று மாவீரர் நாள்பொதுக் கூட்டத்தில் கலந்துகொண்டுபேசிய அரசியற் துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன் தெரிவித்தார்.

மேலும் அவர் பேசுகையில், இன்று சமாதானத்தைப் பற்றி பேசிக்கொண்டிருக்கிறோம் சமாதானம் வரும் தீர்வு கிடைக்கும் என்று பலரும் பேசிக்கொண்டிருக்கிறோம். நாமும் அதைத் தான் எதிர்பார்த்தோம்.

சிங்கள அரசு மாறி இருக்கின்றது. புதியதோர் இனவாதம் பேசாத அரசு ஆட்சிபீடம் ஏறியிருக்கிறது. இந்த அரசிற்கு சிங்கள மக்கள் ஓர் அங்கீகாரம் கொடுத்திருக்கிறார்கள். அதாவது தமிழ் மக்களுக்கான உரிமைகளை கொடுக்கலாம் என்று. இனவாதம் பேசியவர்கள் எல்லாம் முடிக்கப்பட்டுவிட்டார்கள் நாமும் இதைத்தான் எதிர்பார்த்தோம். சந்திரிகா

(5 ஆம் பக்கம் பார்க்க)



கோப்பாய் மாவீரர் துயிலும் இல்லத்தில் மூத்த தளபதி பொட்டம்மான் பொதுச்சுடரை ஏற்றிவைப்பதை முதலாவது படத்திலும், மாவீரரின் கல்லறைகளுக்கு பெற்றோர் சுடரேற்றி அஞ்சலிசெலுத்துவதை இரண்டாவது படத்திலும் காணலாம்.

## தலைவரின் பணிப்பின்கீழ் இரு மீனவர் விடுவிப்பு

தமிழீழத் தேசியத் தலைவரின் விசேட பணிப்பின் பேரில் மீனவக் கைதிகள் இருவர் நேற்று விடுதலை செய்யப்பட்டனர்.

ககயீன முற்றிருந்த புத்தளத்தைச் சேர்ந்த எச். ஜி. சோமரட்ண, கே. எம். ரஞ்சன் பர்ணாண்டோ ஆகிய இரு மீனவர்களுமே நேற்றைய தினம் விடுதலை செய்யப்பட்டவர்களாவர்.

இவர்கள் இருவரும் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் யாழ். வதிவிட பதில் பிரதிநிதியாகிய போல் புறுப் என்பவரிடம் அரசியல் துறை நடுவப் பணியகப் பொறுப்பாளர் திரு. தங்கன் அவர்களினால் உத்தியோக பூர்வமாகக் கையளிக்கப்பட்டனர்.

# பாகிஸ்தானின் கறுப்பு சந்தையில் நான்கு வழிகளில் ஆயுதங்கள் குவிகின்றன

## லாகூரிலிருந்து வெளியாகும் த நேஷன் தகவல்

உலகில் இன்று துப்பாக்கிகள் அதிகம் உள்ள ஓர் நாடாக பாகிஸ்தான் உள்ளது. இங்கு கண்ணிவெடி ஒன்று மூன்று ரூபாவிற்கும் ரொக்கட்டும் கைக்குண்டும் ஒவ்வொன்று 150ரூபாவிற்கும் விற்கப்படுகின்றது. இந்த தகவலை லாகூரிலிருந்து வெளிவரும் 'த நேஷன்' என்ற தினசரி வெளியிட்டுள்ளது.

இவ்வாயுதங்கள் ஆப்கான் போர் நடைபெற்ற போது பாகிஸ்தான் ஐ.எஸ்.ஐ. உளவு அமைப்பு ஊடாக அமெரிக்காவின் சி.ஐ.ஏ. வழங்கியவையாகும். இவை இப்போது காஷ்மீர் தீவிரவாதிகளிடமும் போய் சேர்ந்துள்ளது. இத்தகைய ஆயுத பெருக்கெடுப்பிற்கு காரணம் சோவியத்திற்கு எதிரான அமெரிக்க புலனாய்வுத்துறையின் நடவடிக்கைத்தளம் பாகிஸ்தானாக இருந்தமையே காரணமாகும். பாகிஸ்தானூடாக ஆயுத விநியோகம் நடைபெறும் பொருட்டுசுவிட்சர்லாந்திலும் சவுதி அரேபியாவிலும் வங்கிக்கணக்குகளை அமெரிக்கா ஆரம்பித்தது. வியட்நாம் போரிற்கு பின்னர் சி.ஐ. ஏயின் பெரிய அளவிலான இச் செயற்பாட்டிற்காக அமெரிக்க அரசு இக்கணக்குகளூடாக பெரும் நிதியுதவி அளித்தது. முதற்கட்டமாக பெருந்தொகையில் சீனத்தயாரிப்பு ஏ.கே. 56 துப்பாக்கிகள் கொள்வனவு செய்யப்பட்டன. இத்தாலிய கண்ணிவெடிகள் ஓமான் மற்றும் எகிப்து ஊடாக கராச்சி வந்து சேர்ந்தன. ஏ.கே துப்பாக்கிகளை தொடர்ந்து பல வட்டாரங்களிலிருந்தும் சிறுரக ஆயுதங்கள், பீரங்கிகள் தருவிக்கப்பட்டன. உதாரணத்திற்கு சி.ஐ.ஏ. 60,000 துப்பாக்கிகளையும், 8000 இலகு இயந்திர துப்பாக்கிகளையும் 100 மில்லியனுக்கு அதிகமான சுற்று ரவைகளையும் துருக்கியிலிருந்து தருவித்ததாகவும் 'நேஷன்' தினசரி கூறுகின்றது.

ஆப்கான் முஜாகுதீன்களுக்கு சில நவீன ஆயுதப் பயிற்சி கூட இல்லாத நிலையில் அவர்களிடம் சுவிஸ் தயாரிப்பு ஓர்லிகன் விமான எதிர்ப்பு துப்பாக்கிகளில் 50 வழங்கப்பட்டன. மோட்டார்கள் எகிப்திலிருந்து வந்து சேர்ந்தன. பாகிஸ்தானிலிருந்து 300மில்லியன் சுற்று ரவைகள் வந்தன. 65,000 தொன் ஆயுதங்கள் 1987இல் பாகிஸ்தானிலிருந்து ஆப்கானிற்குள் கொண்டு செல்லப்பட்டன.

இந்த ஆயுதங்கள் முஜாகுதீன்களுக்கு சென்று சேர்வதற்கு இடையில் பல இடங்களில் இவை இரகசியமாக இறக்கி எடுத்துச் செல்லப்பட்டுக் கொண்டும் இருந்தது. இது அண்மையில் உண்மை என்றும் ஊர்ஜிதம் செய்யப்பட்டும் உள்ளது. பாகிஸ்தான் ஐ. எஸ். ஐ. உளவமைப்பின் முன்னாள் தலைவர் அண்மையில் நியூயோர்க் ரைம்ஸிற்கு அளித்த ஓர் பேட்டியில் பாகிஸ்தானிடம் இன்னமும் பொதி உடைக்கப்படாத நிலையில் மூன்று மில்லியன் ஏ.கே துப்பாக்கிகள் இருப்பதாக ஒப்புக்கொண்டிருந்தார். இது பாகிஸ்தானில் பெரும் ஆயுத சந்தையை தோற்றுவித்தது.

பெசாவருக்கு வெளியே துப்பாக்கிகள் வெளிச்சந்தையில் விற்பனையாகின்றன. லான்டி கோடல் டாரா, அடமக்ஹல், மீராம்ஷா ஆகிய பகுதிகள் உலகின் பெரும் ஆயுத சந்தையாக மாறியுள்ளன. பாகிஸ்தானின் பல பகுதிகளிலும் இருந்து இங்கு வாடிக்கையாளர்கள் வருகின்றனர். இவ்வாயுதங்கள் இடத்திற்கு இடம் வெவ்வேறு விலையில் விற்பனையாகின்றன. டாராவிற்கும், அடமக்ஹல்க்கும் இடையேயும் கராச்சியின் கறுப்புச் சந்தைக்கும் இடையே விலை வேறுபாடுகள் உண்டு. ஏ. கே துப்பாக்கிகள் 11,000 ரூபா விற்கும் டாராவிலும் கராச்சியில் 12,000ரூபாவிற்கும்விற்பனையாகின்றன.

பாகிஸ்தானின் இந்த சட்டவிரோத ஆயுத சந்தையில் கிடைக்கும் ஆயுதங்களை நான்கு பிரிவுகளாக பிரிக்க முடியும். முதலாவது ஆப்கானுக்கு எடுத்துச் செல்லப்படுகையில் இடையில் இறக்கப்பட்டவையாகும். சீன ஏ. கே-56 துப்பாக்கிகள் முன்னாள் கிழக்கு ஜேர்மனி மற்றும் ருமேனியாவினது கலாஷ்னிக்கோவ் துப்பாக்கிகள் இஸ்ரேல் மற்றும் எகிப்தின் இயந்திரத் துப்பாக்கிகள் மேற்கு ஜேர்மனியின் எம். பி 5 கள் சாம் ஏவுகணைகள், சீனத் தயாரிப்பு கண்ணிவெடி அகற்றும் ரொக்கட்டுகள், எகிப்திய சீன 122 எம். எம் பீரங்கி குண்டுகள் இலத்திரனியல் தொடர்பு சாதன தொழில்நுட்பம் என்பன முதல் வகையில் அடங்குபவை.

இரண்டாவது வகை, ஆப்கான் போரின் போது சோவியத்திடம் கைப்பற்றப்பட்ட ஆயுதங்கள் இவற்றில் சோவியத் மற்றும் கிழக்கு ஐரோப்பிய ஏ. கே - 47 துப்பாக்கிகள், ஏ. கே - 74 துப்பாக்கிகள், ஏ. கே. எஸ். யூ 75 மற்றும் இலகு இயந்திர துப்பாக்கி வடிவிலான ஏ. கே 74, ரிறின் கோவ் எனப்படும் சினைப்பர் துப்பாக்கிகள், ஆர். பி. ஜிகள், பின்னுதைப்பற்ற துப்பாக்கிகள் என்பன அடங்கும்.

மூன்றாவது வகை, உள்ளூர் தயாரிப்பு ஏ. கே. 47 இப்பகுதியில் உள்ள இரு முன்னணி ஆயுத கம்பனிகளும் பெசாவரில் உள்ள ஜி. பாடில் தொழிற்சாலையும் கலாஷ்னிகோவ் துப்பாக்கிகளையும் கைத்துப்பாக்கிகளையும், 38 கலிபர் கொண்ட வெப்ளிஸ்கொட் கைத்துப்பாக்கிகளையும்தயாரிக்கின்றன.

நான்காவது வகை, மர்மமான வகையில் இனந்தெரியாத வழிமுறையில் பாகிஸ்தான் ஆயுத சந்தைக்கு வரும் ஆயுதங்களாகும். இவற்றில் பாகிஸ்தானில் தடைசெய்யப்பட்ட 9 எம். எம் கலியூகார்பைன் துப்பாக்கி நீண்ட குறுகிய குழாய்கள் உடைய ஊஸி கார்பைன் துப்பாக்கிகள் மேற்கு ஜேர்மனியின் எம்.பி 5 ரக இயந்திரத் துப்பாக்கிகள் ஈரானிய மற்றும் சவுதி அரேபிய ஜி 5 துப்பாக்கிகள் என்பன உள்ளன. இந்த ஆயுத சந்தைகள் அண்மையில் கராச்சியில் நிலவிய இனக்கலகத்தில் இரத்தம் ஓடச் செய்ததிலும் பங்கு வகித்ததாக அப்பத்திரிகை குறிப்பிடுகின்றது.

# மட்டக்களப்பில் மீண்டும் வெள்ளம் ரயில்பாதை அடியுண்டு சென்றது

(மட்டக்களப்பு)
மட்டக்களப்பில் பெய்த கடும் மழையினால் பெரும் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. இதனால் போக்குவரத்துகளும் துண்டிக்கப்பட்டுள்ளன. சில கிராமங்களில் மூன்றடிக்கு மேல் வெள்ளம் பாய்வதாக தெரிவிக்கப்படுகின்றது.

ஏறாவூர் அருகே ரயில் பாதை துண்டிக்கப்பட்டுள்ளதால் ரயில் சேவை நிறுத்தப்பட்டுள்ளது. கொழும்பு ரயில் பொலநறுவை வரையுமே செல்லும் என அறிவிக்கப்படுகின்றது. ரயில் பாதையின் சுமார் 25 மீற்றர் நீள தண்டவாளம் வெள்ளத்தினால் அடியுண்டு சென்று விட்டதாக தெரிவிக்கப்படுகின்றது: மேலும் மழை பெய்யலாம் என வானிலை நிலையம் எதிர்வு கூறியுள்ளதால் இப்பகுதியில் வெள்ள நிலைமை மேலும் மோசமடையலாம் என நம்பப்படுகின்றது.

# இடம்பெயர்ந்தோர் தங்கியிருக்கும் முகாம்கள் திருத்தியமைக்கப்படுகின்றன

(யாழ்ப்பாணம்)
இடம்பெயர்ந்த தீவக மக்கள் தங்கியிருக்கும் முகாம்களில் உள்ள குடிசைகள் திருத்தியமைக்கப்படுகின்றன.

தீவக இடம் பெயர்ந்தோர் நலன் காக்கும் கழகம் இன்னும்சில நிறுவனங்களின் உதவியுடன் தீவக மக்கள் தங்கியிருக்கும் முகாம்களில் உள்ள குடிசைகளை புனரமைப்புச் செய்து வருகின்றது.

சங்கானை நீதவான் வளவு முகாமில் 86 குடிசைகளும் சங்கரத்தை வள்ளியம்மை முகாமில் 49 குடிசைகளும், உரத்தி முகாமில் 22குடிசைகளும் தற்பொழுது புனரமைப்பு செய்யப்பட்டு வருகின்றன. (இ)

# தென்மராட்சி, பச்சிலைப்பள்ளி மலேரியா மீண்டும் தீவிரம்

(தென்மராட்சி)
தென்மராட்சியில் பச்சிலைப்பள்ளி பிரதேசத்தில் மீண்டும் மலேரியா நோய் தீவிரம் அடைவதாக மருத்துவமனை புள்ளி விபரப்படி அறியப்படுகின்றது.

தொடர்ந்து பெய்துவரும் மழையின் காரணமாக நுளம்பு அதிகரித்துக் காணப்படுவதால் இந்நோய்பரவுகின்றது. கிளாலி, பளை, மாசார், கொடிகாமம், கச்சாய் போன்ற இடங்களில் இந்நோய் கூடுதலாக காணப்படுகின்றது. இதே வேளை மூளைமலேரியா நோயாலும் பலர் பாதிக்கப்பட்டதாக சாவகச்சேரி, கொடிகாமம், பளை போன்ற மருத்துவமனைகளின் புள்ளி விபரத்தின்படி தெரியவருகின்றது .(86)

## அத்தாய் கிராமத்தில் 5லட்சம் பனைவிதை நடுகை

கற்பக சோலை திட்டத்தின் கீழ் குடாநாட்டில் இவ்வருடம் 05 லட்சம் பனம் விதைகள் நடுகை செய்ய திட்டமிடப்பட்டுள்ளது. அந்த வகையில் வடமராட்சி பகுதியில் உள்ள அத்தாய் கிராமத்தில் கடந்த முதலாம் திகதி பனம் விதை நாட்டல் நிகழ்வு இடம்பெற்றது.

கிராம சேவையாளர் திரு. கே. ரி. புவனேந்திரன் தலைமையில் நடைபெற்ற இவ்வைபவத்தில் வடமராட்சி தென்மேற்கு பிரதேச செயலர் செ. சீனிவாசன் அவர்கள் முதல் விதையினை நாட்டி விழாவினைஆரம்பித்து வைத்தார்.

அதனைத் தொடர்ந்து தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவன வடமராட்சிக் கோட்ட இணைப்பாளர் யாழ் மாவட்ட திட்டமிடல் பிரதிப் பணிப்பாளர், வடமராட்சி தென் மேற்கு பிரதேச செயலர், கரவெட்டி பிரதேசசெயலர், உதவித் திட்டமிடல் பணிப்பாளர்ஆகியோர் உரை நிகழ்த்தினர்.

இவ் விழாவில் கிராமிய உற்பத்திக் குழுக்களுடன் பொதுமக்கள் பலரும் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

### விதை விசிறல்

சூழலை பேணி பாதுகாக்கும் பொருட்டு தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் வெளி கொண்ட பிரதேசங்களிலும் மற்றும் விறகுக்கான மரங்கள் வெட்டப்படும் இடங்களிலும்விதை விசிறல் நடவடிக்கையினை மேற்கொண்டு வருகிறது.

அந்த வகையில் தென்மராட்சிப் பகுதியில் பளை பிரதேசத்திலும், வடமராட்சியிலும், வல்லை, யாக்கரை வெளியிலும், வேம்பு புளி, நாவல் போன்ற பல இனவிதைகள் விசிறப்பட்டுள்ளன.

### பாப்பரசருக்கு பாதுகாப்பு

(கொழும்பு)
அடுத்த தைமாதம் கொழும்பு வர இருக்கும் பாப்பரசர் அருளப்பர் சின்னப்பருக்கு பாதுகாப்பு வழங்க 15000 பொலிசார் ஒதுக்கப்பட்டுள்ளனர். மேலும் இவர் பயணம் செய்ய குண்டு துளைக்காத கார் கொண்டுவரப்படவுள்ளது.

### புலிகளின் குரல் நிகழ்ச்சி நிரல்

**1994 - 11 - 28**
**திங்கள் இரவு**

08.01 - தளிர்கள் - சிறுவர்களுக்கான நிகழ்ச்சி
08.20 - தாயகப் பாடல்கள்
08.30 - செய்திகள்
08.40 - தரிசனம் - நிகழ்ச்சியில் பல்குரலில் ஒலி எழுப்பவல்ல ஈழத்துச் சதன் என்று அழைக்கப்படும் திரு. ஆறுமுகம் சோமசேகரம் அவர்களுடனான செவ்வி.
09.00 - மணிக்கு இரவு நிகழ்ச்சிகள் யாவும் நிறைவுபெறும்.

**1994 - 11 - 29**
**செவ்வாய் காலை**

07.02 - மாவீரவணக்கம்
07.15 - இன்றையதாரகை
07.30 - செய்திகள்
07.35 - பத்திரிகைச் செய்திகள்
07.40 - தாயகப் பாடல்கள்
08.00 - மணிக்கு காலை நிகழ்ச்சிகள் யாவும் நிறைவுபெறும்.


## வரி விளம்பரம்

**பழைய சேலைகள் தேவை**
பாவித்த நைலெக்ஸ் சேலைகள் விலைக்கு வாங்கப்படும். தொடர்பு: தமிழர் புனர்வாழ்வுக் கழகம், 83/2, காங்கேசன்துறை சாலை, கொக்குவில் மற்றும் எமது பிரிவுக் காரியாலயங்கள் கன்னாகம், பருத்தித்துறை, நாகர்கோயில் பளை, சாவகச்சேரி, பண்டிதர்குடியிருப்பு.(10219)

**தவறிவிட்டது**
26-11-94-ல் வல்லைவெளிக்கும் இருபாலைச் சந்திக்கும் இடையில் ஒரு கறுத்த பேசுடன் பணம், திறப்புக் கோர்வை ஆகியன தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து ஈழநாதம் பணிமனையில் கொடுக்கவும். லோ. கிரேதாசரன் ஆசிரியகலாசாலைகோப்பாய். (10220)

**உடன் விற்பனைக்கு**
நல்லின பிறிமா புறோயிலர்கள் உடன் விற்பனைக்கு உண்டு. அத்துடன் இறைச்சிக்கோழியும் மொத்தமாகவும், சில்லறையாகவும் விற்பனை செய்யப்படுகின்றது. அத்துடன் (துப்புரவும் செய்துதரப்படும்). தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி:- மேஜர் பிரதாப்செட்டிப் பண்ணை, இராஜவீதி, கோப்பாய். (சி-10792)

**சமூகமாற்றத்திற்கான அரங்கு**
ஈழத்தமிழரிடையே சமூகமாற்றத்திற்கான வன்மையான அரங்கினை வளர்ப்பது பற்றிய ஒருநாடக ஆக்கவியல் ஆய்வு நூல் எல்லாக் கடைகளிலும் விற்பனையாகிறது. விநியோகம் வசந்தம் புத்தக நிலையம். (10203)

**சித்திர வகுப்புகள்**
வட இலங்கை நுண்கலை மன்ற தேர்வுகளுக்குரிய வகுப்புகள் 28. 11. 94 (திங்கள்) மாலை 3 மணிக்கு ஆரம்பம் இல. 6, பென்டிக்கோஸ் வீதி கச்சேரியடி (10209)

**மனிதரும் சமூக வாழ்வும்**
சி. கா. செந்திவேல் எழுதிய மனித சமுதாய தோற்றம், வளர்ச்சி பற்றிய பதின்மூன்று ஆய்வுக் கட்டுரைகள் அடங்கிய தொகுப்பு.எல்லாக் கடைகளிலும் விற்பனையாகிறது. விநியோகம் - வசந்தம் புத்தகநிலையம் (10202)

**நீரிழிவு ஔடதம்**
நீரிழிவு நோயாளருக்கென பாவிக்கக் கூடிய ஆட்டாமா, குரக்கன்மா, ஒடியல்மா மற்றும் வறுத்த உழுந்துமா, பச்சை உழுந்துமா, தொகையாகவும் சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம். பெற்றுக் கொள்ளுமிடங்கள்; அண்ணா கோப்பிக் கடை (யாழ்ப்பாணம், திருநெல்வேலி, இணுவில்) (சி-10676)

**POSTGRADUATE DIPLOMA IN PUBLIC ADMINISTRATION 1993/94 SUBMISSION OF DISSERTATION**

The students those who have sat the final examination of the Postgraduate Diploma in Public Administration - 1993/94 are requested to submit their Dissertation on or before 1994 - 12 - 16 to the Senior Assistant Registrar / Examinations & Admissions, University of Jaffna.

Late submission is not accepted.

Registrar
(சி-10796)

**கம இரசாயன விற்பனையாளர்கட்கு**
தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தால் விநியோகிக்கப்பட்டுள்ள கமக்காரர் அறிமுக அட்டைகளூடாக இணைத்து விவசாய உள்ளீட்டுப் பொருட்களையும் அதில் பதிவு செய்து விநியோகங்களை மேற்கொள்ளுமாறும், விநியோகங்களை மேற்கொள்ளும் போது பற்றுச்சிட்டைகளில், கமக்காரர் அறிமுக அட்டை இலக்கத்தைப் பதிவு செய்து கொள்ள வேண்டுமென முன்னர் தெரியப்படுத்தப்பட்டிருந்ததற்கமைய தொடர்ந்தும் அவ்வொழுங்கு நடவடிக்கைகளை செயற்படுத்துமாறும் அதனை மீறுவோர் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் அறிவித்துள்ளது.

## தவறிவிட்டது

25-10-94 அன்று விளக்கு வைத்த குளத்தில் இருந்து கிளாலிக்கு இடையில் லொறி புத்தகம் 28ஸ்ரீ 732)ரக்ஸ், வங்கி புத்தகம் என்பன தவறிவிட்டன தயவு செய்து கண்டு எடுத்தவர்கள் கீழ்வரும் விலாசத்துக்கு அனுப்பி வைக்கவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

சன்றைஸ் விற்பனை நிலையம்,
கச்சாய் றோட், சாவகச்சேரி.
(10315)

## நினைவு கூருகின்றோம்...

**28.11.1994**

1986ஆம் ஆண்டு இதேதினத்தில் திருமலை- திரியாய்ப் பகுதியில் எமது முகாமொன்றின் மீது சிறிலங்கா இராணுவத்தினர் சுற்றிவளைத்த போது வீரச்சாவெய்திய-

**கப்டன் கருணா** (முத்துக்குமாரு யுகராஜா - சாம்பல்தீவு- திருமலை)

**ஜனகராஜ்** (சபாரத்தினம் செல்வசோதி - அல்வாய் வடக்கு - பருத்தித்துறை)

**கரன்** (தர்மலிங்கம் பிரபாகரன் -கோப்பாய் தெற்கு - யாழ்)

1987ஆம் ஆண்டு சாவகச்சேரி - மட்டுவில் பகுதியில் இந்தியப்படையினருடன் ஏற்பட்ட சமரில் சயனைட் உட்கொண்டு வீரச்சாவெய்திய-

**வின்சன்** (கங்காதரம் மகிழ்நன் - சரசாலைவடக்கு- சாவகச்சேரி)

1988ஆம் ஆண்டு மட்டு - களுவாஞ்சிக்குடிப் பகுதியில் இந்தியப்படையினர் மற்றும் தேசவிரோதிகளால் கைது செய்யப்படுகையில் சயனைட் உட்கொண்டு வீரச்சாவெய்திய-

தென் தமிழீழத்தில் முதல் வீரச்சாவெய்திய பெண்போராளியான,

**லெப். அனிதா** (சித்திராதேவி தம்பிராசா - ஆரையம்பதி - மட்டு)

யாழ்- நாவற்குழிப் பகுதியில் இந்தியப்படையினர் மற்றும் தேசவிரோதிகளினால் சுட்டுக் கொல்லப்பட்ட நாட்டுப்பற்றாளரான,

**திருமதி மனோகரி பிரபாகரன்** (அருள்வீதி, நாவற்குழி- யாழ்)

1990ஆம் ஆண்டு ஊர்காவற்றுறையில் சிறிலங்கா இராணுவத்தினருடன் ஏற்பட்ட சமரில் வீரச்சாவெய்திய-

**வதனன்** (கார்த்திகேசுபாலேந்திரன் - கருங்காலி- காரைநகர்)

**சிறி** (முத்தையா மகேந்திரராசா - புளியங்கூடல்,கருவில் - ஊர்காவற்றுறை)

1991ஆம் ஆண்டு மட்டு- சத்துருக்கொண்டான் பகுதியில் சிறிலங்கா இராணுவம் சுட்டதில் பலியான நாட்டுப்பற்றாளரான,

**ரவி** (இ. உதயகுமார் - இருதயபுரம் - மட்டு)

இதேதினம் தமிழீழ எல்லைக்குட்பட்ட பிரதேசத்திலும் கடற்பரப்பிலும் சிறிலங்காப்படையினரால் கொல்லப்பட்ட தமிழ்ப்பொதுமக்கள்.

ஆகியோரை இந்நாளில்
நினைவு கூருகின்றோம்.

**தமிழீழ விடுதலைப்புலிகள்**
(சி-10794)

## 5-ம்ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு
13-12-1939

உதிர்வு
22-11-1989

அமரர்
**பொன்னையா தனபாலசிங்கம்**
(வலி-கிழக்கு வட பகுதி ப. நோ.கூ.சங்கம்-அச்சுவேலி கிளை முகாமையாளர்)

**திதி: 28- 11- 1994**

அன்பின் உருவாய், பண்பின் பிறப்பிடமாய், பாசத்துடன் எம்மையெல்லாம் வழிநடத்திச் சென்ற எங்கள் அன்புத் தெய்வமே! கண்ணை இமை காப்பது போல எம்மையெல்லாம் காத்திரே! காலத்தின் கோலத்தால் காலன் உமை அழைத்து ஆண்டு ஐந்து சென்றாலும், உங்கள் பொன்னான நினைவுகள்எம்மை விட்டு என்றுமே அகலாது.

உங்கள் ஆத்மா சாந்திபெற பிரார்த்திக்கும்:
மனைவி, பிள்ளைகள்,
உடன்பிறந்தோர், மைத்துனர்,
உற்றார், உறவினர்கள்.

அல்பேட் வீதி,
அச்சுவேலி தெற்கு, அச்சுவேலி. (10217)

# சிறையிலிருந்த என்னை படுகொலை செய்ய சதி நடந்தது

## -தென்னாபிரிக்க ஜனாதிபதி மண்டேலா

(ஜொகனர்ஸ்பேர்க்)
1969 ஆம் ஆண்டில் தென் ஆபிரிக்க அரசு தன்னை கொலை செய்ய எத்தனித்ததாக தற்போதைய தென்ஆபிரிக்காவின் ஜனாதிபதி நெல்சன் மண்டேலா குறிப்பிட்டுள்ளார். அவர் தனது சுயசரிதை நூலில் அவர் படுகொலை முயற்சி பற்றி தெரிவித்துள்ளார்.

இந்நூலின் சில விடயங்கள் 'டைம்' சஞ்சிகை வெளியிட்டுள்ளது 1960இல்தமக்கு ஆயுள் தண்டனை வழங்கப்பட்டதாகவும் தாம் ரொபன் தீவு சிறையில் தண்டனைக்கு அனுப்பப்பட்டதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

1969இல் இளம் சிறை அதிகாரி ஒருவர் என்னிடம் வந்தார். என்னுடன் உரையாடினார். வெளியிலிருப்போர் நான் தப்பிச் செல்ல உதவுவதற்காக திட்டம் வகுப்பதை நான் அறிந்திருந்தேன். என்னைத் தேடிவந்த சிறை அதிகாரி நான் தப்பிச் செல்ல உதவ தயாராக இருப்பதாக கூறினார்.

சிறையில் இருக்கும் ஏனைய சிறையதிகாரிகளுக்கு மருந்து கொடுத்து அவர்களை மயக்கமுறச் செய்தபின் என்னைப் படகு ஒன்றில் ஏற்றி தீவிற்கு வெளியே கொண்டு செல்வதே அத்திட்டமாகும்.

எனினும் அவ்வாறு செல்ல நான் இணங்கவில்லை. பின்னர் என்னிடம்வந்த சிறை அதிகாரிஅரசின் பிரதிநிதி என்றும் அவர் தென்னாபிரிக்க உளவுப் பிரிவைச் சேர்ந்தவர்என்பதும் தெரிய வந்தது. என்னைக் கொல்ல அரசு வகுத்த சதித்திட்டம் அது என்பதும் பின்னர் தெளிவாகியது. என்னைத் தீவுக்கு வெளியே அழைத்துச் சென்று தப்பியோடும் போது சுட்டதாக படையினர் மூலம் என்னைக் கொல்வதேஅத்திட்டமாகஇருந்தது என அவர் அந்நூலில் குறிப்பிட்டுள்ளார்.

# வெடிவிபத்து 15 பேர் பலி

காமராசர் மாவட்டம் சிவகாசிப் பகுதியில் நேற்று முன்தினம் இடம்பெற்ற பயங்கர வெடிவிபத்து ஒன்றில் 15பேர் உயிரிழந்தனர். வெடி விபத்து நடந்த இடத்தை சுற்றியிருந்த ஒன்பது வீடுகள் பலத்த சேதம் அடைந்துள்ளன.

இவ் வெடிவிபத்திற்கான காரணங்கள் சேகரிக்கப்பட்டு வருகின்றன. எனினும் ஒரு வீட்டில் சேகரித்து வைக்கப்பட்டிருந்த பட்டாசு தயாரிப்பதற்கான பொட்டாசு பாகு மூலப்பொருள் வெடித்தமையே இவ் விபத்துக்கு காரணமாக இருக்கலாம் எனப் பொலிசார் கருத்து தெரிவித்துள்ளனர்.

இச் சம்பவத்தில் படுகாயமடைந்த இருவர் சிவகாசி மருத்துவ மனையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

# மாவீரர்களின் பெற்றோர்கள் கௌரவிக்கப்பட்டனர்

(யாழ்ப்பாணம்)
தமிழீழ விடுதலைப் போரிற்கு தம்மை அர்ப்பணித்த மாவீரர்களின் பெற்றோர்கள் நேற்றுமுன்தினம் யாழ் குடாமுழுவதிலும்அமைந்திருந்த13 நிலையங்களில்வைத்து கௌரவிக்கப்பட்டனர்.

ஈகச்சுடரேற்றலுடன் ஆரம்பமான இந்நிகழ்வுகளில் அனைத்துப் பெற்றோரும், மாவீரர் குடும்ப உறுப்பினர்களும் கலந்து கொண்டு உறுதியின் உறைவிடம் சின்னத்திற்கு மலர்களிட்டு அஞ்சலி செலுத்தினர்.

இதனையடுத்து ஒவ்வொரு நிலையங்களிலும் அமைக்கப்பட்டிருந்த கலந்துரையாடல் மண்டபங்களில் மாவீரரின் பெற்றோர் போராளிகளுடனும் தம்முள்ளும் கலந்துரையாடினர். இதன்போது மாவீரர்களின் பெற்றோர்களுக்கு போராட்ட நிகழ்வுகளைச் சித்திரிக்கும் ஒளி நாடாக்கள் காண்பிக்கப்பட்டன. அங்கு அவர்களுக்கு அன்பான உபசரிப்புகளும் இடம் பெற்றன.

இதனையடுத்துஇரவு மாவீரர்களின் பெற்றோர் அவர்களது பிள்ளைகளின் கல்லறைகள் நினைவுக் கற்கள் அமைந்திருக்கும் மாவீரர் துயிலும் இல்லங்களுக்கு அழைத்துச் செல்லப்பட்டு சுடரேற்றல் நிகழ்விற்கு தயார்படுத்தப்பட்டனர்.

# ஆந்திரா கண்ணிவெடியில் பஞ்சாப் அதிகாரி பலி

(ஹைதராபாத்)
ஆந்திர மாநிலத்தின் கரீம் நகரில் இடம்பெற்ற நிலக்கண்ணிவெடித் தாக்குதலில் சிக்கி உயர் பொலிஸ் அதிகாரிகள் 6 பேர் கொல்லப்பட்டுள்ளனர். நேற்று முன்தினம் நடைபெற்ற இச்சம்பவத்தில் பஞ்சாப்பின் சிறப்பு அதிரடிப்படையின் தளபதி உட்பட 5 பொலிஸ் அதிகாரிகள் பலியாகியுள்ளனர்.

16 பொலிஸ் அதிகாரிகள் ட்ராக்டர் ஒன்றில் படை காவல்நிலையத்திற்கு சென்று கொண்டிருந்தபோது நக்சலைட்டுகளால் இத்தாக்குதல் நடத்தப்பட்டது.

# கடவுச்சீட்டு தொலைத்தவர் 88-ம்ஆண்டுமுதல் பாரிஸில்

(பாரிஸ்)
தனது கடவுச்சீட்டைத் தொலைத்து விட்டமைக்காக ஈரானைச் சேர்ந்த நபரொருவர் பாரிஸ் விமான நிலையத்தில் ஆறாண்டுகாலமாக தங்கியிருந்துவருகின்றார்.

அதிகார நடைமுறைச் சிக்கலே அவரை இந்த நிலைக்கு தள்ளியிருக்கிறது.

1988 நவம்பர் மாதம் உரிய பயண ஆவணங்களின்றி ஈரானிலிருந்து அவர் பாரிஸ் வந்து சேர்ந்தார். அன்று முதல் எந்த நாட்டையும் சேராதவர் என்ற நிலையில் அவர் வாழ்ந்து வருகின்றார். அவர் பாரிஸ் விமான நிலையத்தில் இருப்பதற்கு உரிமையற்றவராக இருக்கும் சமயம் நாட்டை விட்டு வெளியேற்ற எந்த ஆவணமும் இருக்கவில்லை எனவும் விமான நிலைய அதிகாரிகள் கூறியுள்ளனர்.

விமான நிலைய ஊழியர்கள் வாங்கிக் கொடுக்கும் உணவிலேயே அவரது வாழ்க்கையும் ஓடி வருகின்றது.

# கொடிகாமம் மாவீரர் துயிலும் இல்லத்தில் பெருமளவில் மக்கள் அஞ்சலி

(தென்மராட்சி)
மாவீரருக்கு அஞ்சலி செலுத்த தென்மராட்சி கோட்டத்தில் நேற்றுஅதிகாலை கொடிகாமம் மாவீரர் துயிலும் இல்லத்தில் பொதுமக்கள் அஞ்சலி செலுத்தினர்.

மாவீரர் துயிலும் இல்லத்தில் மாவீரர் கல்லறைகளின் முன்னால் பெற்றோர்கள், உறவினர்கள் நேற்று அதிகாலை 12.01 மணிக்கு மணியோசை ஒலிக்க தீபம் ஏற்றி அஞ்சலி செய்யும் காட்சி அனைவரின் நெஞ்சையும் தொட்டது. இரவு 11.45 மணிக்கு மக்கள் அஞ்சலி செலுத்திக் கொண்டு இருக்க வானொலி மூலம் தேசியத் தலைவரின் விசேட உரை இடம் பெற்றது. அஞ்சலி செலுத்திய பொதுமக்கள் தலை தாழ்த்தி நின்று தலைவரின் உரையை செவிமடுத்தனர். பின்னர் 12-01 க்கு மாவீரர் பொது ஈகச் சுடரினை தமிழீழ விடுதலைப் புலிகளின் மூத்த தளபதி திரு. கருணாவும், விடுதலைப் புலிகளின் மகளிர் படைப் பிரிவு விசேட தளபதி - செல்வி ஜெனாவும் ஏற்றிவைத்தனர் இதனைத்தொடர்ந்து மாவீரர்களது நினைவுக்கற்களுக்கு முன் நடப்பட்ட ஈகச்சுடர் ஏற்றப்பட்டது. மாவீரரின் பாடல் இசைக்கப்பட பொதுமக்கள் திரண்டு வந்து இப் புனித நிகழ்வில் கலந்து கொண்டனர். போராளிகளும் இதில் கலந்து கொண்டனர். மாவீரர் துயிலும் இல்லம் நிறைந்து வீதிகளிலேயே பொதுமக்கள் நின்று அஞ்சலி செய்தனர். (86)



வடமராட்சிப் பகுதியில் அமைக்கப்பட்ட மாவீரர்தின அலங்கார வளைவு ஒன்றை மேலே உள்ள படத்தில் காணலாம்.

# இந்தியப்பெண் அகதிமுகாமில் தடுப்பு; சட்டவிரோதம் என நீதிமன்றம் தீர்ப்பு

(சென்னை)
வெளிநாட்டவர் தடுப்பு சட்டத்தின் கீழ் இந்தியப் பெண் ஒருவரையும், அவரது இரண்டு குழந்தைகளையும் செங்கல்பட்டிலுள்ள இலங்கைத் தமிழ் அகதிகளுக்கான சிறப்பு முகாமில் தடுத்து வைத்திருந்தமை சட்டவிரோதமானது. இதற்காக 50,000 ரூபா இழப்பீடாக தமிழக அரசு வழங்க வேண்டும். இவ்வாறு சென்னை உயர் நீதி மன்றம் தீர்ப்பளித்துள்ளது.

இலங்கையர் ஒருவரை திருமணம் செய்திருந்த வெங்கடேஸ்வரி என்ற இந்தியப் பெண் தாக்கல் செய்திருந்த ஆட்கொணர்வு மனுவை விசாரணை செய்த உயர் நீதிமன்றம் இந்த தீர்ப்பை வழங்கியுள்ளது. சிறப்பு முகாமின் துணை அலுவலர் தமது சொந்தப் பொறுப்பில் ரூபா 5000 வழங்க வேண்டும் என நீதிபதிகள் தமது தீர்ப்பில் கூறியுள்ளனர்.

# மாவீரர்தின ஒளிப்பதிவில் வெளிநாட்டு செய்தியாளர்

(யாழ்ப்பாணம்)
மாவீரர் தின நிகழ்வுகளை தமது தொலைக்காட்சி படக் கருவிக்குள் அடக்குவதற்கு வெளிநாட்டு செய்தியாளர்கள் நேற்று மும்முரமாக ஈடுபட்டிருந்தார்கள்.

நள்ளிரவு 12 மணியளவில் ஆலயங்கள் தோறும் நினைவொலி எழுந்தவேளை கோப்பாய் மாவீரர் துயிலும் இல்லத்தில் அமைக்கப்பட்டிருந்த பொதுச்சுடரை மூத்த தளபதி பொட்டம்மான் ஏற்றி வைத்தபோது வெளிநாட்டுப் பத்திரிகையாளரின் புகைப்பட கருவிகள் பளிச்சிடும் வெளிச்சத்தை பாய்ச்சி மின்னலடித்தது போன்று பல கோணத்திலும் இருந்து புகைப்படங்களை எடுத்த வண்ணம் இருந்தனர். இதே வேளை மாவீரர் துயிலும் இல்லத்தில் குழுமி இருந்த பல்லாயிரக்கணக்கான மக்கள் மாவீரர்களுக்கு இரு நிமிட மௌன அஞ்சலி செலுத்திக் கொண்டிருந்தனர். ஆலயங்களிலிருந்து எழும் நினைவொலியைத்தவிர எங்கும் நிசப்தம் குடிகொண்டிருந்தது. இந் நிகழ்வுகளை தமது ஒலி, ஒளி கருவிகளுக்குள் அடக்கிக் கொள்வதில் வெளிநாட்டு பத்திரிகையாளர்கள் சுறு சுறுப்புடன் இயங்கிக் கொண்டிருந்தனர். (சி)

# காந்தியின் அஹிம்சைக் கொள்கை இன்று காலத்திற்கொவ்வாதது

## காந்தி திரைப்பட தயாரிப்பாளர் டேவிட்அட்டன்பரோ

(லண்டன்)
மகாத்மாகாந்தி போதித்த சாத்வீக அஹிம்சை போதனைகள் எவையும் இன்று நடைமுறைக்கு ஒவ்வாதவை என 'காந்தி' எனும் ஆங்கிலப்படத்தின் தயாரிப்பாளரான சேர் ரிச்சர்ட் அட்டன்பரோ தெரிவித்துள்ளார்.

ஹிந்துஸ்தான் ரைம்ஸ் பத்திரிகைக்கு அவர் அளித்த பேட்டி ஒன்றில் மேற்கண்டவாறு தெரிவித்தார் அதில் மேலும் அவர் தெரிவிக்கையில், 'மாறிவரும்' உலகில் காந்திய கொள்கைகள் அர்த்தமற்றவை. காந்தியின் இக்கொள்கை அர்த்தமுள்ளதாக இருந்த காலம் இரண்டாம் உலகப்போர் காலகட்டமாகும். இது இப்போது பொருந்தாது.

நியூயோர்க்கிலிருந்து ஒரு பட்டனை அழுத்தினால் பயங்கரமாக இளம்பும் ஏவுகணை ஒன்று ரஷ்யாவையோ, சீனாவையோ தாக்கக்கூடிய இன்றைய நிலையில் காந்திய கொள்கைகளை அமுல் செய்வது சாத்தியமற்றது என்றும் அட்டன்பரோ மேலும் தெரிவித்தார்.

# கோப்பாய் மாவீரர் துயில் இல்லம் மக்கள் வெள்ளத்தில் நிரம்பியது

## வீதியின் இரண்டு மைல் நீளத்திற்கு நின்றிருந்தனர்

(யாழ்ப்பாணம்)
கோப்பாய் மாவீரர் துயிலும் இல்லத்திற்கு நேற்று நள்ளிரவு அஞ்சலி நிகழ்வுகளில் கலந்து கொள்வதற்கு அலையலையாக திரண்ட மக்கள் வெள்ளம் மாவீரர் துயிலும் இல்லம் நிறைந்து வீதிகளிலும் முட்டிவழிந்தது.

இவ்வாறாகத் திரண்ட மக்கள் வெள்ளத்தினைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர தமிழீழ காவல் துறையினரும் தொண்டர்படையினரும் பெரும் சிரமங்களை எதிர்நோக்கியதை அவதானிக்க முடிந்தது.

இராசபாதை வீதியில் மாவீரர் துயிலும் இல்லத்தில் இருந்து சுமார் இரண்டுமைல்கள் தொலைவில் சகல வாகனங்களும் தடுத்து நிறுத்தப்பட்டு மக்களின் அஞ்சலிகளுக்கு ஏற்றவாறு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன.

இராசபாதை வீதியில் இரண்டு மைல்வரை மாவீரர் துயிலும் இல்லத்திற்கு வடக்காகவும், தெற்காகவும் மக்கள் வெள்ளம் அஞ்சலி நிகழ்வு நேரம் நெருங்க நெருங்க துயிலும் இல்லம் நோக்கி நகர்ந்த வண்ணமிருந்தது.

என்றுமில்லாதவாறு கூடிய மக்கள் வெள்ளம் அஞ்சலி நிகழ்வு ஆரம்பமாகிய சமயம் அவரவர் இடங்களில் நின்றவாறு அஞ்சலி நிகழ்வுகளில் பங்கேற்றுக் கொண்டதை அவதானிக்க முடிந்தது.
(சி), (பா)

# ஒரு கைத்துப்பாக்கியுடன் ஆரம்பித்த போராட்டம் இன்று புதிய பரிமாணம் பெற்றது

## மாவீரர் நினைவுக்கூட்டத்தில் கலைபண்பாட்டுக்கழகதுணைப்பொறுப்பாளர்

(தென்மராட்சி)
எமது போராட்டம் தார்மீகமுடையது இதன் வழியிலேயே எமது தலைவர் போராட்டத்தை வழிநடத்தி செல்கிறார் எமது போராட்டம் மிகவும் உச்சியில் நிற்கின்றது விரைவில் எமது மண் விடுதலை பெறுவது உறுதி.

இவ்வாறு நேற்றுமுன்தினம் தென்மராட்சிக் கோட்டத்தில் தென்மராட்சி கிழக்கு கூட்டுறவாளர்கள் ஒன்றிணைந்து நடாத்திய மாவீரர் நினைவு அஞ்சலிக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரை நிகழ்த்திய கலை பண்பாட்டுக்கழக துணைப் பொறுப்பாளர் திரு. அன்பரசன் கூறினார். கூட்டுறவுச் சங்க தலைவர் திரு. ஆனந்தராசா தலைமையில் இடம்பெற்ற இந் நிகழ்வில் தொடர்ந்து உரையாற்றிய அவர்,

எமது நாட்டில் எத்தனையோ மன்னர்கள் ஆண்டதாக வரலாறு கூறுகிறது. இறுதியாக பௌத்த சிங்கள இனம் ஆண்ட போது எமது பிரதேசத்தில் யாழ்ப்பாணம், அச்சுவேலி, அல்வாய் போன்ற இடங்களில் சிங்களப் பாடசாலைகள் நிறுவப்பட்டு 5 மைல் களுக்கு ஒரு பொலிஸ் நிலையம் இருந்தது. எமது தமிழ் இனத்தை பௌத்தமாக மாற்ற இவ் அரசு திட்டமிட்டது.

பொலிஸ் நிலையங்களில் நாம் சித்திரவதைப்பட்டோம் அடக்கப் பட்டோம், ஒடுக்கப் பட்டோம். பின்னர் எமது மக்களை கொதிக்கும் தாரில் சிங்களவர்கள் ரயர் போட்டு எரித்தார்கள். இதை எல்லாம் கண்ணூடாக பார்த்து எமது மக்கள் படும் வேதனையை சகிக்க முடியாது தமிழர்கள் குட்டக்குட்டகுனிந்து கொண்டே இருக்கின்றார்கள் என்பதைஉணர்ந்து எமதுதேசியத் தலைவர் ஒரு கைத்துப்பாக்கியுடன் 1972ம் ஆண்டு போராட்டத்தை ஆரம்பித்தார், 1983 ஆம் ஆண்டு ஜூலை 23 ஆம் திகதி திருநெல்வேலியில் நடந்த தாக்குதலில் 13 இராணுவத்தினர் கொல்லப்பட்டனர்.

பின்னர் போராட்டம் புதிய பரிமாணம் பெற்றது பொலிஸ் காவல் நிலையங்கள் எம்மால் தாக்கி அழிக்கப்பட்டது,

இப்படியேஇராணுவம் முகாமினுள் முடக்கப்பட்ட நிலையில் தற்போது தரை மற்றும் கடற்படைகள் எமது போராட்டத்தில் பெரும் வளர்ச்சி கண்டுள்ளன. இன்று உலகிலேயே தலைவர் பிரபாகரன் போல ஒரு தலைவரை காண முடியாது உள்ளது என சொல்லுமளவிற்கு போராட்டம் வளர்ந்துள்ளது.

இந்த போராட்டத்தினை வழிநடத்தும் தலைவனின் திடகாத்திரம்,நம்பிக்கை,மன உறுதியும் மாவீரரின் அர்ப்பணிப்புமே இவற்றிற்கு காரணம். எனவே இந்த மாவீரர்களின் பாதையில் நாம் தொடரவேண்டும் என்றார். இவரைத் தொடர்ந்து திரு. பொ. ஈசன் வர்த்தக சங்கத் தலைவர் திரு. அருணாசலம், ஊழியர்கள் உரைநிகழ்த்தினர்.

இறுதியில் கலைநிகழ்வும் இடம் பெற்றது மாவீரரின் திருவுருவப்படத்திற்கு பெருமளவு மக்கள் மலர் தூவி அஞ்சலி செலுத்தினர். (86)

# தென்மராட்சியில் எழுச்சிகரமானதாக அமைந்த மாவீரர் தின நிகழ்வுகள்

(தென்மராட்சி)
தென்மராட்சிப் பகுதியில் மாவீரர் தினம் மிகவும் எழுச்சிடனும் புனிதமாகவும் பொதுஸ்தாபனங்கள், அரச ஊழியர்கள், கூட்டுறவாளர்களால் அனுஷ்டிக்கப்பட்டது.

தென்மராட்சிப் பகுதியில் கைதடி பலநோக்கு கூட்டுறவு சங்கம், சாவகச்சேரியில் பிரதானவீதியில் சாவகச்சேரி பலநோக்கு கூட்டுறவு சங்க வாசலில் பிரமாண்டமான முறையில் வளைவுகள் அமைக்கப்பட்டு இருந்தன. இதே போன்று கொடிகாமம் மாவீரர் துயிலும் இல்ல வீதிகள் தோறும் கொடிகாமம் கிழக்கு பலநோக்கு கூட்டுறவு சங்கத்தினர் வீதிகளுக்கு அருகில் மாவீரர்களின் வரலாறுகளை சித்திரிக்கும் உணர்வு பூர்வமான படங்களை வைத்திருந்தனர் கொடிகாமம் கூட்டுறவு சங்க வாசலில் தளபதிகேணல்கிட்டு அவர்களினதும் முதல் வீரச்சாவடைந்த பெண் போராளி மாலதியினதும் போராட்ட நிகழ்வினை சித்திரிக்கும் உருவப்படமும் வைக்கப்பட்டு வளைவுகளும் கட்டப்பட்டு இருந்தன. கொடிகாமம் வர்த்தகசங்கம், சாவகச்சேரி வர்த்தகசங்கம், தெங்குபனம் பொருள் உற்பத்தி கூட்டுறவு சங்கம் போன்றவற்றினால் வளைவுகளும் கட்டப்பட்டிருந்தன மின் ஒளிகளும் ஒளிர்ந்த வண்ணம் காணப்பட்டன.

இதேவேளை மாவீரருக்கு கூட்டுறவு சங்கத்தினர் இணைந்து மாவீரர் அஞ்சலி கருத்தரங்கையும் கலைநிகழ்ச்சியையும் யா/ கொடிகாமம் திருநாவுக்கரசு மகா வித்தியாலயத்தில் நடத்தியுள்ளனர். வர்த்தக சங்கத்தினர் பல இடங்களில் சிரமதானப் பணிகளையும் மேற்கொண்டு இருந்தனர். (86)

# வெளிவாரிப் பரீட்சை திகதிகளில் மாற்றம்

யாழ்ப்பாணப் பல்கலைக் கழக வெளிவாரிப் பொதுக் கலைமாணிப்பரீட்சை, பகுதி II பரீட்சை நேர அட்டவணையில் பின்வரும் மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளன. 8-12-94, 9-12-94, 10-12-94 ஆகிய திகதிகளில் மாலை 1.30-4.30- மணிவரை நடைபெற இருந்த பாடங்கள் முறையே 12-12-94, 13-12-94, 14-12-94 ஆகிய திகதிகளில் காலை 9.00 மணி முதல் 12.00 மணி வரை நடைபெறும். விபரங்களை வெளிவாரிப் பரீட்சைப் பிரிவு அறிவித்தல் பலகையில் பார்க்கலாம்.

# தாச்சிப் போட்டியில் தெரிவான அணிகள்

சங்கானைக் கல்விக் கோட்டத்தைச் சேர்ந்த பாடசாலை மாணவர்களுக்கிடையே நடைபெற்ற தாச்சிப் போட்டியில் பின்வரும் பாடசாலை அணிகள் தெரிவு செய்யப்பட்டுள்ளன. இப் பாடசாலைகளுக்கிடையே கோட்ட மட்டத்தில் தெரிவு செய்வதற்கான போட்டிகள் விரைவில் நடைபெறவிருப்பதாக கோட்ட விளையாட்டுத்துறைப் பொறுப்பாளர் திரு. நா. நடனசண்முகதாசன் தெரிவித்தார்.

தெரிவு செய்யப்பட்ட பாடசாலை அணிகளின் விபரம் வருமாறு:-

ஆண்டு 4,5

ஆண்: திருவடிநிலை சைவத்தமிழ்ப்பாடசாலை,மூளாய் அ.மி.த.க. பாடசாலை.

பெண்: திருவடிநிலை சைவத் தமிழ்ப் பாடசாலை, வட்டு. கார்த்திகேய வித்தியாலயம்.

13 வயதின் கீழ்:-

ஆண்: சுழிபுரம் ஆறுமுக வித்தியாலயம்,சங்கானை சிவப்பிரகாச மகா வித்தியாலயம்.

பெண்: சங்கானை சிவப்பிரகாச மகா வித்தியாலயம் சித்தன்கேணி ஸ்ரீகணேச வித்தியாலயம்.

# ஓய்வூதியம்

யாழ் மாவட்ட புகையிரத உள்ளூராட்சி திணைக்களத்தைச் சேர்ந்த ஓய்வூதியர்களது நவம்பர் மாத ஓய்வூதிய வவுச்சர்கள் யாழ் வந்துள்ளன

மேலும் யாழ் சமநலசேவை திணைக்களம், காப்புறுதி சபை மற்றும் திணைக்களங்களுக்கான கட்டு நிதியும் வந்துள்ளது. தேசிய அடையாள அட்டைகளும் வந்தன (யோ)

# அரசியல் தீர்வை காண்பது மூலமாகவே பாதுகாப்பு செலவில் குறைப்பை ஏற்படுத்தலாம்

## பொருளியல் நிபுணர் கருத்து தெரிவிப்பு

(கொழும்பு)

1994 ஆம் ஆண்டுக்கான வரவுசெலவு திட்டத்தில் பாதுகாப்பிற்கான வரி 3 வீதத்திலிருந்து 3.5 வீதமாக அதிகரிக்கப்பட்டுள்ளது. இவ்வதிகரிப்பு வீதத்தால் 1225 மில்லியன் மேலதிக வருமானம் கிடைக்குமென அரசு எதிர்பார்க்கின்றது. ஆனால் இவ்வறவீடுகளினால் ஏற்படும் செலவு உயர்வை உற்பத்தியாளர்களும் வியாபாரிகளும் சில சந்தர்ப்பங்களில் நுகர்வோர் மீது தள்ளிவிடக்கூடும். இது பொருள்களின் விலை அதிகரிப்பை, ஏற்படுத்துவதுடன் யுத்த செலவை மக்கள் சுமக்கவேண்டிய நிலைக்கும் இட்டுசெல்லும் என பொருளியல் வல்லுநர் ஒருவர் கொழும்பு தினசரியில் எழுதிய கட்டுரையில் குறிப்பிட்டுள்ளார்.

அதில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது, 1983 ஆம் ஆண்டுக்கு பின்னர் இலங்கையில் பாதுகாப்பு செலவு அதிகரித்துக்கொண்டு செல்கின்றது. 1977 ஆம் ஆண்டு 500 மில்லியன் ரூபாவிலிருந்து 1987 ஆம் ஆண்டு பத்து ஆண்டு காலப்பகுதியில் 10,000 மில்லியன் ரூபாவாக அதிகரித்ததுடன் 1990 ம் ஆண்டு 15,000 மில்லியன் ரூபாவாகஅதிகரித்தது1994-ம் ஆண்டு வரவு செலவு திட்டத்தின் படி பாதுகாப்பு செலவிற்காக செலவிடப்பட்ட தொகை 22,832 மில்லியன் ரூபாவாக அதிகரித்துள்ளது. இது இவ்வாண்டுஅரசின்மொத்தசெலவினத்தின்ஐந்தில்ஒருபங்காகும். 1977 ஆம் ஆண்டு செலவிடப்பட்ட பாதுகாப்பு செலவுடன் ஒப்பிடுகையில் 1994 ஆம் ஆண்டிற்கான இச் செலவு விகிதம் சுமார் 45 மடங்கு அதிகரிப்பை காட்டியுள்ளது. இவ்வாறு பாதுகாப்பு செலவு அதிகரிப்பதற்கு முக்கிய காரணம் வடக்கு-கிழக்கில் நடைபெறும் உள்நாட்டுப் போராகும். 1994 ஆம் ஆண்டிற்கான வரவு செலவு திட்ட உரையில் நிதி, இராஜாங்க அமைச்சர் குறிப்பிடுகையில் பாதுகாப்பு செலவு அதிகரிப்பிற்கு உள்நாட்டுப் போரே காரணம் எனக் கூறியிருந்தார்.

பாதுகாப்பு செலவு தொடர்ந்தும் உயர்ந்து செல்கின்றது. மறுசீரமைப்பு, அகதிகள் மீளக்குடியேற்றல், பாதுகாப்பு படையினருக்கான நவீன உபகரணங்களைத் தெரிவு செய்தல், படையினருக்கான கொடுப்பனவுகள், இழப்பு நன்கொடைகள், ஆயுதங்களை கொள்வனவு செய்தல், வாகனப்பராமரிப்பு, சாயமடைந்த படையினர் பராமரிப்பு என்பன முக்கிய உள்ளடக்கங்கள் ஆகும். இந்த செலவினத்திற்கு நிதியளிக்க பணம் அச்சிடவோ அல்லது சந்தையில் கடன் பெறுவதோ நல்லது என அரசு கருதவில்லை. இதனடிப்படையில் செலவைக் கட்டுப்படுத்தி வருமான வழிகளை உயர்த்திக் கொள்வதே இதற்கான மாற்று வழியாக கருதுகின்றது இதன் படி பாதுகாப்பு வரி அறிமுகப்படுத்தப்பட்டது.

பாதுகாப்புச் செலவை குறைப்பதற்கான முக்கிய வழி இனப்பிரச்சினைக்குரிய அரசியல் தீர்வை விரைவில் காண்பதாகும். தீர்வு ஒன்று எட்டப்பட்டால் குறைந்த பட்சம் பாதுகாப்பு செலவு அதிகரித்து செல்லும் போக்கையாவது கட்டுப்படுத்த முடியும். அமைதி நிலை ஏற்பட்டால் படையில் உள்ளோர் தொகையை குறைத்து மிகையான படையினரை அவர்களின் கல்வி நிலைக்கேற்ப ஏனைய துறைகளில் வேலை வாய்ப்பை வழங்கலாம் அத்துடன் படையினருக்கு இப்போது ள பல சலுகைகளை நிறுத்துவதன் மூலமும், படை வாகனங்களை ஏனைய துறைகளுக்கு வழங்குவது மூலமும் பாதுகாப்புச் செலவில் குறைப்பை மேற்கொள்ளமுடியும் என குறிப்பிட்டுள்ளார்.

# கொழும்பில் கரும்புலிகள் ஐவர் ஊடுருவியுள்ளனராம்

மோட்டார் சைக்கிள்களில் சென்று தங்கள் இலக்கை அழிக்கவென ஐந்து கரும்புலிகள் கொழும்புக்கு வந்துள்ளதாக தேசிய புலனாய்வு வட்டாரங்களை மேற்கோள் காட்டி 'திவயின' செய்தி வெளியிட்டுள்ளது.

இதையடுத்து கொழும்பு நகரிலுள்ள பிரதான வீதிகளில் கண்காணிப்பு பலப்படுத்தப்பட்டுள்ளதாகவும், அரசாங்க, தலைவர்கள் மற்றும் ஆயுதப் படைகளைச் சேர்ந்த உயரதிகாரிகள் தங்களது பாதுகாப்பை உறுதிப்படுத்திக்கொள்ளுமாறு சிறிலங்கா பாதுகாப்பு அமைச்சு கேட்டிருப்பதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

# முதல் இழைய வங்கி இலங்கையில் அமைப்பு

(கொழும்பு)

ஆசிய - பசுபிக் பிராந்தியத்துக்கான முதலாவது இழைய வங்கி இலங்கையில் நிறுவப்படவுள்ளது. இதன் காரணமாக பலதரப்பட்ட நோய்களினால் பாதிக்கப்பட்டுள்ள நோயாளர்கள் நன்மையடையவுள்ளனர் இந்தவகையில் எலும்புகள், இருதய வால்வுகள், மூளைத் திசுக்கள் என்பன பாதுகாத்து வைக்கப்படும். வைத்தியசாலைக்கு கொண்டுவரப்படும் சடலங்களிலிருந்து இழையங்கள் பெறப்படும். இதுவரை நோயாளியின் உடலின் ஒரு பகுதியிலிருந்து சத்திரசிகிச்சைக்கு இழையங்கள் பெற்றுக் கொள்ளப்பட்டது குறிப்பிடத்தக்கது.

# கராட்டி கண்காட்சி; மாணவன் பரிதாப மரணம்

(கொழும்பு)

கராட்டிப் பந்தய மொன்றின்போது பலமாக தலையில் அடிபட்ட மாணவன் ஒருவன் பரிதாபகரமாக மரணமானான் இச்சம்பவம் மத்துகம ஆனந்த மத்திய கல்லூரியில் இடம் பெற்றது.

கல்லூரியில் நிதியுதவி நிகழ்ச்சியாக கராட்டிக் கண்காட்சி நடாத்தப்பட்ட போதே இந் நிகழ்வு ஏற்பட்டது.

பலமான அடியினால் மூளைப்பகுதியின் இரத்த ஓட்டம் பாதிக்கப்பட்டதினாலேயே மரணம் சம்பவித்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

## பனை விதை நடுகை

வடமராட்சி சிங்கை நகரில் ஒரு இலட்சம் பனை விதை நடுகை செய்த நிறைவு விழா இம்மாதம் 4-ம் திகதி நடைபெற்றது.

தமிழீழத்தில் இருக்கின்ற பனை வளத்தை2000-ம்ஆண்டளவில் இரட்டிப்பாக்கும் நோக்கில் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தின் பனை தென்னை வள அபிவிருத்திப் பகுதியால் நடைமுறைப் படுத்தப்பட்டு வரும் கற்பகச்சோலை பனை நடுகைத் திட்டத்தின் கீழ் இடம் பெற்ற இப் பனை விதை நடுகை பனை அபிவிருத்திச் சபையினால் மேற்கொள்ளப்பட்டது.

## இலக்கிய முற்றம்

இருபாலை தமிழ் மா மன்றத்தின் இலக்கிய முற்றம் தொடர்ஏழு,எதிர்வரும் 30-ம் திகதி புதன்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு மன்றப் பணிமனையில் நடைபெறும்.

இந்நிகழ்வில் ஆய்வுரைகள், விமர்சனஉரை, வெளியீட்டுரை, மதிப்புரை ஆகியவற்றுடன் சிறுகதை, கவிதை, தனி நடிப்பு, பேச்சு, குரலோசை, மெல்லிசை ஆகிய போட்டிகள் நடைபெறும். (24)

# திருத்திய நெல் வர்க்கங்களினால் அதிக விளைச்சல் பெற முடிகிறது

எல்லோரும் இந்நாட்டு மன்னர்கள் என்றாலும் மன்னர்களாக மற்றவர்களால் பாராட்டப்படும் வாய்ப்பு எல்லோருக்கும் கிடைப்பதில்லை. ஆனால் கடந்த மே மாதம் 6-ம் திகதி எமது தேசியத் தலைவர் அவர்களிடம், ''வேளாண் மன்னர்'' என்ற விருதும் தங்கப்பதக்கமும், சான்றிதழும், பாராட்டும் பெறும் வாய்ப்பு,அதிர்ஷ்டம், வட தமிழீழத்தை சேர்ந்த ஆறு விவசாயிகளுக்கு கிடைத்தது.

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தால் தற்சார்பு பொருண்மியத்தை, கட்டி எழுப்பவும், உற்பத்தியை அதிகரிக்கச் செய்யவும் பல்வேறு போட்டிகள் நடாத்தப்பட்டுவருகின்றன. கடந்த காலபோகம் முதல், நெல் பயிரிடும் விவசாயிகளுக்கிடையே ''வேளாண் மன்னர் தெரிவுப் போட்டி'' என்ற புதிய போட்டியும் நடாத்தப்பட்டு வருகின்றது.

இப் போட்டியானது, வட தமிழீழத்தில் உள்ள சகல மாவட்டத்திலும் தனித்தனியே மழையை நம்பிய நெற்செய்கையிலும், நீர்ப்பாய்ச்சுகை நெற்செய்கையிலும்வேறு வேறாக நடைபெற்றது. இதில் வெற்றி பெற்றவர்களுக்கே, எமது தலைவர் அவர்கள் 'வேளாண் மன்னர்' என்ற விருது வழங்கி கௌரவித்தார்கள்.

வட தமிழீழத்தில் ஆகக்கூடிய விளைச்சலை பெற்றவரான, திரு. யோசப் சகாய ராசா பெரராஎன்றமன்னார், சுற்கடந்த குளத்தைச் சேர்ந்த விவசாயி, ஒரு ஏக்கரில் நீர்ப்பாய்ச்சுகை செய்கையில் 186 புசல் விளைவு பெற்றார். எமது சராசரி விளைச்சல் 50-60 புசலாக இருக்கும் போது இவர் மூன்று மடங்குக்கு மேற்பட்ட விளைச்சலை பெற்றமை குறிப்பிடக்கூடிய சாதனையாகும். இவர் பயிரிட்ட நெல் (BG 11-11) என்ற சம்பா ரக 4-4½ மாத நெல் வர்க்கமாகும். இந்த நெல்லும், இவரை வேளாண் மன்னராக்குவதற்கு ஒரு காரணம் என்றே கூறவேண்டும். உச்ச விளைச்சல் பெற விரும்புபவர்கள், வேளாண் மன்னராகவரபோட்டியிடுபவர்கள், இந்தநெல்லை விதைத்தால் உச்ச விளைச்சலை பெற முடியும் என்பதில் சந்தேகமில்லை.

வேளாண் மன்னர்கள் பயிரிட்ட நெல்லை எடுத்து நோக்கினால் BG 350, BG 11-11, B.W 351, B.G 500-1, A.T 51, B.G 500-1 ஆகிய திருத்திய உச்ச விளைச்சல் தரும் நெல்லினங்களாக உள்ளன. இவர்கள் தூயவிதை நெல்லை பாவித்தமையினால் தான் உச்ச விளைவு கிடைத்ததாகவும் கூறுகின்றனர். இவர்களில் சிலர் தூயவிதை நெல் உற்பத்தியில் ஈடுபட்டுள்ளவர்களாகவும் உள்ளனர். ஆகவே திருத்திய நெல்வர்க்க தூய விதைகளை பாவிப்பதன் மூலம் விளைவை பெருமளவில் அதிகரிக்க முடியும் என்பது தெளிவாகின்றது.

வேளாண் மன்னர்கள்,ஆறு பேருடைய சராசரி விளைவை எடுத்து நோக்கினால் அது 151 புசலுக்கு மேற்பட்டதாக உள்ளது. இதிலிருந்து எமது ஒரு ஏக்கர் நெல்விளைவை 150 புசலுக்கு மேல் அதிகரிக்க செய்யக்கூடிய வாய்ப்பு உள்ளது என்பது தெளிவாகின்றது.

வேளாண் மன்னர் தெரிவுப் போட்டிக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ள இவ்வேளையில் வேளாண் மன்னர்களாக தெரிவு செய்யப்பட்டவர்களின் திருத்திய செய்கை முறைகள் சிலவற்றை வெளிப்படுத்துவது பொருத்தமுடையதாகும். அனைத்து விவசாயிகளும் விவசாயத்துறை சார்ந்தோரும் முயற்சி எடுப்பின் எமது நெல் உற்பத்தியில் மிகப் பெரிய அதிகரிப்பை ஏற்படுத்தி தன்னிறைவையும் நாட்டின் சுபீட்சத்தையும் அடையலாம் என்பதுதிருபணமாகின்றது.

வேளாண்மன்னரான திரு. கந்தையா முத்துக்குமாரு தன்னிடம் உள்ள மாடுகளை பயிரிடாத காலத்தில் வயலிலேயே கட்டுகின்றார் இதனால் பயிருக்கு தேவையான சகல போசணைப்பொருளும், அவருடைய வயலில் தாராளமாக கிடைத்தபடியால் உச்ச விளைவு கிடைத்தது. இவர் மட்டுமல்ல அநேகமாக, எல்லா வேளாண்மன்னரும் மாட்டெருவை இட்டமை வெற்றிக்கு வழிகோலியது.

வேளாண்மன்னர்கள் முன்பு குறிப்பிட்டது போல, திருத்திய நெல்வர்க்கங்களையும், தூய விதைகளையும், பயன்படுத்தியமை குறிப்பிட வேண்டிய மற்றொரு அம்சம்ஆகும்.

திரு. வேலுப்பிள்ளை சிவபாதம் என்ற புதுக்குடியிருப்பு முல்லைத்தீவைச் சேர்ந்த விவசாயி மாட்டினால் உழுது, எந்த வகையான நாசினியும் பயன்படுத்தாமல், வேளாண் மன்னராக வெற்றி பெற்றவர் இவர் மாட்டு உழவினால் களைகளையடக்கியும், கையால் களைகளை பிடுங்கியும் களைகளை கட்டுப்படுத்தினார். பூச்சிகளை கையால் பொறுக்கியும், வரம்புகளில் நெருப்புபோட்டுகவரச்செய்து அழித்தும், கட்டுப்படுத்தியுள்ளார். இது நாசினிகள் இல்லாமலும், விவசாயம் செய்யலாம் என்பதற்கு உதாரணமாகும்.

-தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம்

## விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது

அகில இலங்கைச் சைவப் புலவர் சங்கம் நடாத்தும் சைவப்புலவர், இளஞ்சைவப் புலவர் பரீட்சைகள் 28-4-95 முதல் 30-4-95 வரை நடைபெறவுள்ளன. இப்பரீட்சைக்கான விண்ணப்ப முடிவுத் திகதி 15-12-94 ஆகும். விண்ணப்பப் படிவங்களைப் பெற்றுக்கொள்ள விரும்புவோர் முத்திரை ஒட்டப்பட்ட தபாலுறையை ''சைவப்புலவர் திரு. வ. கந்தசாமி, செயலாளர், அகில இலங்கைச் சைவப்புலவர் சங்கம், 125, அரசடி வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம்.'' என்னும் முகவரிக்கு அனுப்பிப்பெற்றுக்கொள்ளலாம் எனத்தெரிவிக்கப்பட்டுள்ளது.

## குமண வந்தது

(வடமராட்சி)

காங்கேசன் துறைக்கு 'குமண' கப்பல் வந்து சேர்ந்துவிட்டது. வெள்ளிக்கிழமை இரவு 7.00 மணியளவில் வந்து சேர்ந்த இக்கப்பலில் யாழ். தபால் திணைக்களத்திற்கு 315 தபால் பொதிகள் வந்துள்ளன. மேலும்ஒரு ஆட்டோவும் வந்துள்ளது. வந்துள்ள ஆட்டோ அனேகமாக கல்வித் திணைக்களத்திற்கென தெரியவருகிறது. (யோ)

## விதை கிழங்கு வந்தது

'குமண' கப்பலில் கமநல சேவைத் திணைக்களத்திற்கு 400 மெட்றிக் தொன் விதை உருளைக் கிழங்கு எடுத்து வரப்பட்டுள்ளது.

# சொந்த நலனுக்காகவே ஐ.தே.க. யுத்தம் நடத்தியது

- பிரதி அமைச்சர் ஹிஸ்புல்லா

முன்னாள் ஐ.தே.க. அரசாங்கம் வேண்டுமென்றே யுத்தத்தை தமிழ் பேசும் மக்களுக்கு எதிராக மேற்கொண்டது. ஆயுத பலத்தாலோ அல்லது பேச்சுவார்த்தை மூலமோ யுத்தத்தை நிறுத்தாது சிலரின் சொந்த நலனுக்காகவே யுத்தம் மேற் கொள்ளப்பட்டது. இவ்வாறு பிரதி தபால் தொடர்பு அமைச்சர் எம்.எல்.ஏ.எம். ஹிஸ்புல்லா தெரிவித்தார்.

மேலும் அவர் எந்தக் கொள்கையும் மக்களின் நலனுக்காகவேயன்றி கொள்கைக்காக மக்கள் அல்ல என்பது பொதுஜனஐக்கிய முன்னணி அரசின் கொள்கைகளாகும் எனவும் தெரிவித்தார்.

# ராணுவசீருடையில் சென்று 8 லட்சம் ரூபா கொள்ளை

இராணுவ கொமாண்டோ பிரிவினர் அணியும் ஆடை தரித்த கோஷ்டியொன்று களுத்துறைப் பகுதியிலுள்ள வீடொன்றில் புகுந்து எட்டு லட்சம் ரூபா பெறுமதியான பொருட்களைக் கொள்ளையடித்துள்ளது.

ஐவர் அடங்கிய இக்கோஷ்டியினர் நவீனரக ஆயுதங்களையும் வைத்திருந்ததாக விசாரணைகளை மேற்கொண்டு வரும் பொலிசார் தெரிவித்துள்ளனர்.

# யாழ். கத்தோலிக்க ஆயர் கொழும்புசெல்லஇருக்கிறார்

(யாழ்ப்பாணம்)

பாப்பரசர் 2-வது அருளப்பர் சின்னப்பரின் இலங்கை விஜயம் தொடர்பான ஏற்பாடுகள் பற்றி ஆராய்வதற்காக கொழும்பில் கத்தோலிக்க ஆயர்கள் கலந்து கொள்ளும் மாநாடொன்று நடைபெறவுள்ளது.

இதே மாநாட்டில் கலந்து கொள்வதற்காக யாழ். ஆயர் அதிவண தோமஸ் சௌந்தரநாயகம் கொழும்பு செல்ல இருக்கிறார்.

# கனடாவில் தமிழர் வீடுகளில் பொலிசார் தேடுதல்

(தென்மராட்சி)

கனடாவில் தமிழர்கள் வாழும் இடங்களில் பொலிசார் திடீரென சோதனை இடுவதாக தெரியவருகின்றது

தமிழ்இளைஞர்உறவினர்களுக்குஇடையில் பல கைகலப்புகள்தொடர்ந்து இடம்பெற்று வருவதாகவும் இதனால் அந்நாட்டுப் பொலிசார் திடீரென இவர்களது வீடுகளை சோதனை இட்டு இவர்களை விசாரித்து தண்டனை வழங்குவதாகவும் தெரியவருகின்றது.

சில இடங்களில் கத்திக்குத்து சண்டைகளும் இடம்பெற்று வருகின்றன. இதனால் இளைஞர்கள் பலர் விசாரிக்கப்பட்டு விடுதலை செய்யப்படுவதும் தற்போது வழமையானநடவடிக்கையாகிவிட்டது. (86)


யாழ்ப்பாணப் பல்கலைக்கழக இந்துமன்றம் நடாத்தும்
நல்லை ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் அவர்களின்
குருபூசைத் தினவிழா

காலம்: 28-11-1994 (இன்று) திங்கட்கிழமை மாலை 3.00 மணி
இடம்: யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கம்
பிரதம விருந்தினர்: பேராசிரியர் க. குணரத்தினம் அவர்கள் துணைவேந்தர், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.
சிறப்புச் சொற்பொழிவு: ''நமது நாவலர்'' சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்கள் தலைவர், ஸ்ரீ துர்க்கா தேவஸ்தானம், தெல்லிப்பழை
விசேட நிகழ்ச்சி: யாழ். பல்கலைக்கழக இராமநாதன் நுண்கலைக்கழகம் அளிக்கும் கலைநிகழ்ச்சிகள்
அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் திருநெல்வேலி.
இங்ஙனம் இந்துமன்றம்

விளம்பர அன்பளிப்பு:
டைமன் றேடர்ஸ்,
பலசரக்கு வியாபாரம்,
டாக்டர் சுப்பிரமணியம் வீதி,
சுன்னாகம்.
(சி-10784)



(இதுஅறிமுகமல்ல ஆற்றலின் வெளிப்பாடு)

புதிய புதிய உத்திகளில் - உங்கள் புளொக்குகளை செய்து கொள்ளுங்கள்

★ லைன் (LINE) ★ ஹாவ் ரோண் (HALF TONE)
★ கலர் படங்களில் பளிச்சிடும் புளொக்குகள்
★ நீடித்த பாவனைக்கு சிங் புளொக்குகள் (ZINC BLOCK)
★ மயிர்கன கோடுகளை துல்லியமாக காட்டும் லைன் (LINE) புளொக்குகள்
★ நவீன இயந்திரத்தில் பிளாஸ்ரிக் புளொக்குகள்

அழகன் புளொக் தயாரிப்பாளர்கள்
27/7, மகேந்திரா (வைமன்) வீதி, யாழ்ப்பாணம்.
(இ)


## சிறுவர் அரங்கு

சிறுவர்களின் உளவிருத்தியை வளர்க்கும் நோக்குடன் ஈழநாதம் மக்கள் தினசரி, சிறுவர் அரங்கு எனும் புதிய பகுதியை விரைவில் தரவுள்ளது. மேற்படி அரங்கை அணிசெய்ய வாசகர்களிடமிருந்தும், சிறுவர்களிடமிருந்தும் ஆக்கங்களை எதிர்பார்க்கின்றோம். இப்பகுதியில் பொதுஅறிவு எனும்வகையில்புதிய தகவல்கள் பலவும் வெளிவரவிருக்கின்றன.

சிந்தனைக்கு
சுதந்திரம் உண்மையாய் இருக்கும்வரை
அதனுள் அனைத்தும் அடங்கியிருக்கும்.
- எட்மண்ட்போக்

ஈழநாதம்

31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம் 28-11-94
தொலைபேசி
ஆசிரியபீடம் 025-2839 நிர்வாகபீடம் 2021
தபால் பெட்டி எண்- 05

# யதார்த்தநிலையும் புலிகளின் நிலைப்பாடும்

தமிழீழத் தேசியத் தலைவர் பிரபாகரன் தனது மாவீரர் தினச் செய்தியில் விடுதலைப் புலிகளின் அரசியல் நிலைப்பாட்டையும், இன்றைய அரசியல் யதார்த்தத்தையும் தெளிவாகவே சுட்டிக் காட்டியுள்ளார். இனப் பிரச்சினைக்கு அரசியத் தீர்வு பற்றிப் பேசும் எவரும் இவ் அரசியல் யதார்த்தத்தையும், புலிகளின் நிலைப்பாட்டையும் புறக்கணிக்க முடியாது.

இச்செய்தியில் "தமிழரின் தேசியப் போராட்டத்தினது இன்றைய வளர்ச்சிக் கட்டத்தைக் கருத்திற் கொண்டு உருப்படியான சுயாட்சித் தீர்வுத் திட்டங்கள் முன்வைக்கப்படுமானால் நாம் அதனைப் பரிசிலனை செய்யத் தயாராக இருக்கின்றோம்'' என்பதும், ''நீண்ட காலமாக இரத்தம் சிந்திப் போராடிய எமது இயக்கம் இன்று தமிழ்ப் பகுதிகளில்தன்னாட்சிக்கட்டமைப்புகளை நிறுவும் அளவிற்குப் போராட்டத்தை உயர்ந்த படிநிலைக்கு எடுத்துச் சென்றிருக்கின்றது. இன்று நாம் மிகவும் பலமான, உறுதியான அத்திவாரத்தில் நிற்கின்றோம்'' என்பதும் முக்கியமான இரு விடயங்கள் ஆகும்.

இதில் முதலாவதான உருப்படியான சுயாட்சித் திட்டத்தைப் பரிசிலிப்பதென்பது விடுதலைப் புலிகளின் அரசியல் நிலைப்பாட்டை வெளிக்காட்டும் அம்சமாகும். அதாவது, தேசிய இன விடுதலைப் போராட்டத்தின் இன்றைய வளர்ச்சிக்கு ஏற்ப சுயாட்சித் திட்டம் ஒன்றே பரிசிலனைக்கு உட்படுத்தக் கூடியது என்பது புலிகளின் நிலைப்பாடாகும். இதன்மூலம், அரசாங்கம் தான் விரும்பிய ஒரு தீர்வுத் திட்டத்தை முன்வைத்து புலிகள் அதை ஏற்றுக் கொள்ள வேண்டும் எனக் கோர முடியாது என்பது தலைவர் பிரபாகரனால் தெளிவாகவே வலியுறுத்தப்படுகின்றது.

இதேசமயம் இரண்டாவது அம்சமானது தமிழ்ப் பகுதிகளில் தன்னாட்சிக் கட்டமைப்புக்களை நிறுவும் அளவிற்குப் போராட்டம் உயர்ந்த நிலைக்குச் சென்றுள்ளது என்ற அரசியல் யதார்த்தத்தைச் சுட்டுவதாக வுள்ளது. அரசாங்கம் சமாதான முயற்சிகளைமேற்கொள்வதானால் இன்று தமிழர் பெற்றுவிட்ட தன்னாட்சிக்கான அடிப்படையினை கருத்திற்கொள்ளாது முன்வைக்கப்படும் எதுவித திட்டங்களினாலும் பயன் ஏதும் இல்லை என்பதும் உணர்த்தப்பட்டுள்ளது. அதாவது இவ்விரண்டு விடயங்களும் இனப்பிரச்சினைக்கான அரசியல் தீர்விற்கான தெளிவான வரையறையை சந்திரிகா அரசிற்கு வழங்குகின்றது என்றும் கூறலாம்.

இதேசமயம் தலைவர் பிரபாகரன் வலியுறுத்தியுள்ள இவ்விரண்டு அம்சங்களும் விட்டுக்கொடுப்பிற்கோ பேரம் பேசுதலுக்கோ இடமில்லாத விடயங்கள் ஆகும். ஏனெனில் இவ்வாறானதொரு நிலை அடைவதற்கும், அரசியற் சூழ்நிலை உருவாவதற்கும் ஆயிரக்கணக்கான போராளிகள் தம்முயிரை ஈகம் செய்துள்ளார்கள்.

தலைவர் பிரபாகரன் குறிப்பிட்டது போல் "எமது விடுதலைக் காப்பியத்தின் ஒவ்வொரு அத்தியாயத்திலும், ஒவ்வொரு பக்கத்திலும், ஒவ்வொரு பந்தியிலும் எமது மாவீரர்களின் தியாக வரலாறு நெருப்பு வரிகளால் எழுதப்பட்டுள்ளது''.

இந்தவகையில் இனப்பிரச்சினைக்கான தீர்வு விடயத்தில் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா கணிசமான தூரம் முன்னேறி வரவேண்டும். இன்றைய அரசியல் யதார்த்தத்தைச் சரியாக மதிப்பீடு செய்து கொள்ள வேண்டும். அவ்வாறு இல்லாது போனால் இனப்பிரச்சினைக்கான அரசியல் தீர்வு அவரால் எட்டப்பட முடியாது போகலாம்.

இனப்பிரச்சினைக்கான அரசியல் தீர்வு என்பது தமிழ் மக்களின் உரிமை தொடர்பானதே ஒழிய சிங்கள மக்களின் உரிமைகள் தொடர்பான பிரச்சினைகள் அல்ல. சிங்கள மக்கள் ஏற்கனவே தமது உரிமைகளை முழுமையாக அனுபவித்து வருகின்றனர். தமிழரின் உரிமைக் கோரிக்கை என்பது சிங்களவரின் உரிமையைப் பறிப்பதற்கான கோரிக்கை அல்ல.

ஆனால், சிங்கள அரசியல்வாதிகள் கடந்த காலத்தில் இதனை மறுவளமாகவேபயன்படுத்தினர். சிங்களவர்களின் ஏகபோகத்தை தமிழர் தட்டிச் செல்ல முற்படுகின்றனர் எனக் கூறி இனக்குரோதத்தை வளர்த்தனர். இதுவேஇனப்போருக்கு வழிவகுத்தது. இரத்த ஆறு ஓட வழிவகுத்தது.

ஆனால், சந்திரிகா அரசாங்கம் இதனை நிவர்த்தி செய்யவேண்டும். அப்பொழுதே இனப்பிரச்சினைக்கான தீர்வில் முன்னேற முடியும். ஏனெனில் தமிழ் மக்கள் சிங்கள ஆட்சியாளர்கள் வழங்க மறுத்த உரிமைகளையும் தன்னாட்சியைப் பெற்றுக் கொள்வதற்கான அடித்தளத்தை தற்பொழுது இட்டுக் கொண்டுவிட்டார்கள். அவர்கள் இன்று தமது மண்ணில் மிகவும் பலமாகவும், உறுதியாகவும் உள்ளனர். "அவர்கள் சலுகைகளுக்காகக் கைகட்டி நிற்கும் ஒரு சாதாரண மக்கள் கூட்டமல்ல.''

இந்தநிலையில் சந்திரிகா அரசாங்கம் இனப்பிரச்சினைக்கு சமாதான ரீதியில் அரசியல் தீர்வு காண்பதானால் தலைவர் பிரபாகரன் சுட்டிக்காட்டிய விடயங்களில் கவனம் செலுத்த வேண்டும். அவ்வாறு அரசியல் யதார்த்தத்திற்கு ஏற்ற மாதிரியான முடிவை அவர் மேற்கொள்வாரேயானால் அதுவே இனப்பிரச்சினைக்கான சமாதானத் தீர்வைக் கொண்டு வரும்.



நேற்று நடைபெற்ற மாவீரர் நாள் அணி நடையில் கலந்து கொண்ட தமிழீழ காவற்துறை அணியை முதலாவது படத்திலும், கடற்புலிகள் அணியை இரண்டாவது படத்திலும் காணலாம்.

# மாவீரர் ஆசைக்கு வடிவம் கொடுப்பதே அவர்களுக்கு நாம் செய்யும் அஞ்சலி

## புதுவை இரத்தினதுரை

(யாழ்ப்பாணம்)
கல்லறைகளில் தூங்கிக் கொண்டிருக்கும் மாவீரரிற்கு என்ன காணிக்கையைச் செலுத்தப்போகின்றோம்? இதுதான் இன்று எங்களிற்கு முன்னால் உள்ள கேள்வி அவர்களின் கல்லறைகளிற்கு நெய் விளக்கு ஏற்றுவதுடன் எமது பணி முற்றுப் பெறுகிறதா? இல்லை அவரது இலட்சியத்திலே என்றும் தளரமாட்டோம் என்ற உறுதியுடன் அவர்களின் நெஞ்சு நிறைய இருந்த ஆசைகளிற்கு வடிவம் கொடுக்கும் பயணத்திலே தொடர்ந்தும் முன்னேறுவதுதான் அந்த மாவீரர்களிற்கு நாங்கள் செய்யும் உண்மையான அஞ்சலியாகும் இவ்வாறு நேற்றுமாலை யாழ் பல்கலைக்கழக மருத்துவ பீட மைதானத்தில் நடைபெற்ற மாவீரர் நினைவுக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போது விடுதலைப்புலிகள் கலை பண்பாட்டுக்கழக பொறுப்பாளர் புதுவை இரத்தினதுரை தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது சமாதான மேசையில் இருந்து பெற்றோல் பெறலாம் போக்குவரத்துபாதை பெறலாம் மாவீரரது கனவைப் பெறமுடியுமா? இல்லை நாம் அவர்களிற்குச் செலுத்தும் காணிக்கையாக அவர்களது கனவை நனவாக்க அவர்களது இலக்கு நோக்கி தொடர்ந்து செல்வோம் என இந்நாளில் உறுதி எடுத்துக் கொள்வோம். (பா) (இ)

# மாவீரர் சிந்திய குருதி எமதினத்தின் நியாயத்தை நிலை நிறுத்தும்

## வண. பிதா இமானுவேல் அடிகள்

(யாழ்ப்பாணம்)
நாம் ஒன்றாக திரளவும் எமது உரிமைகளை பற்றி நாம் கூடுதலாக உணரவும் மாவீரர்களே எங்களுக்கு உந்துசக்தியாக இருந்திருக்கிறார்கள்.

எங்களுடைய இனத்தின் கோரிக்கைகள் நீதியானது நேர்மையானது என்று நிலை நாட்ட இவர்கள் சிந்திய இரத்தமும் இவர்களின் தியாகமும் உந்து சக்தியாக இருக்கின்றது. இவ்வாறு மாவீரர் நாள் பொதுக் கூட்டத்தில் உரையாற்றிய வணக்கத்திற்குரிய இமானுவேல் அடிகள் தெரிவித்தார்.

நாங்கள் என்ன ஒப்பந்தங்களை செய்துகொண்டாலும் என்ன தீர்வை நாங்கள் முடிவெடுத்தாலும் இந்த அரைநூற்றாண்டுகளாக எங்களுடைய இனத்தின் கோரிக்கைகளுக்காக மடிந்தவர்கள் விசேடமாக இந்த 10 ஆண்டுகளிலே தமது உயிர்களை அர்ப்பணித்தவர்கள் இவர்கள் நிலைநாட்டிய சத்தியங்கள் இவர்கள் விடுத்த வேண்டுகோள்கள் அனைத்தையும் நாங்கள் கடந்துசெல்ல முடியாது என மேலும் அவர் தெரிவித்தார்.

அவர் மேலும் உரையாற்றுகையில், எங்களுக்கு வரும் பெரிய பாவச்சோதனை என்னவென்றால் நாங்கள் நீண்டபயணத்திலே களைத்து இளைத்துப் போய் விட்டோம் எத்தனையோ பலிகள் கொடுக்கப்பட்டிருக்கின்றது எத்தனையோ துன்பங்கள் எங்களை ஆட்டி அசைக்கின்றன இப்படியான நேரத்தில் தான் எதிரியானவன் எங்களுக்கு ஒரு போலியான சமாதானத்தை கொடுத்து எங்களை ஏமாற்றக் கூடும் ஆகையினாலே நாங்கள் விழிப்பாகவும், நிதானமாகவும் யதார்த்த நிலையை உணர்ந்தவர்களாகவும் இருக்க வேண்டும் என்றார்.

பலலாயிரக்கணக்கான

டிருந்தது.

கூட்ட மேடை வர்ணக் கொடிகளினால் மிக அழகாக அலங்கரிக்கப்பட்டிருந்தன. மேடையின் கீழ்ப் பகுதியில் அலையெறியும் தண்ணீருக்கு மத்தியில் ஆயுதத்துடன் கப்பல் ஒன்று மிதப்பது மாதிரியான ஓவியம் ஒன்று அமைக்கப்பட்டிருந்தது.

பொதுக்கூட்டத்தின் ஆரம்பத்தில் மாவீரர் பணிமனைப் பொறுப்பாளர் திரு. பொன் தியாகம் ஈகச்சுடரை ஏற்றி வைத்தார். யாழ். மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் திரு. இளம்பரிதி தலைமையில் கூட்டம் ஆரம்பமானது. (தி, பா, சி, இ)

## ஒருபுறம்

அரசு பதவி ஏற்றபொழுது உலகிற்கு வெளிப்படையாகவும் தமிழர்களுடைய பிரச்சினையை தீர்ப்போம், தமிழர்களுடைய உரிமையை வழங்குவோம் என்று கூறியது. ஆனால் அந்த அரசு ஆட்சி பீடம் ஏறியபிறகு ஜனாதிபதி தேர்தல் வரைக்குமான இடைக்காலம் வரை அவர்கள் செயற்பட்டவிதம் மென்மையானதாக இருந்தது. பின்பு அவர்களுடைய ஆட்சி முழு அதிகாரத்தின்கீழ் வந்த பிறகு அவர்களுடைய போக்கு வித்தியாசமாக இருப்பதை நாங்கள் காண்கின்றோம்

இன்று கொழும்பு சென்று திரும்பிய அனேகமானோர் எம்மை வந்து சந்திக்கின்ற பொழுது கூறுகின்றனர் இந்த முறை இனப்பிரச்சினைக்கு சந்திரிகா அம்மையார் தீர்வு காண்பார் என்று. இதை சொல்பவர்கள் அரசினுடைய தோற்றத்தின் ஒருபக்கத்தை மட்டும் பார்த்தே இவ்வாறு சொல்கிறார்கள்.

எங்களை பொறுத்தவரையிலே எங்களுடைய மக்களுக்காக, எமது மக்களின் விடிவிற்காக எமது மண்ணின் விடிவிற்காக போராடிக்கொண்டிருக்கின்றோம். நாங்கள் பல பக்கங்களையும் நுணுக்கமாகவும் ஆழமாகவும் ஆராய்ந்து எமது போராட்ட முன்னெடுப்புகளை நடாத்திக் கொண்டிருக்கின்றோம்,

நீங்கள் அண்மையிலே பத்திரிகைகளிலே செய்திகளிலே பார்த்திருப்பீர்கள். அதாவது இராணுவம் ஒருபக்கம் தன்னை தயார்படுத்திக் கொண்டிருக்கின்றது. புதிய புதிய படைப் பிரிவுகளை உருவாக்குகின்றது. புதிய புதிய யுத்த தளபாடங்களை இறக்கிக் கொண்டிருக்கின்றது. தனது இராணுவத்தை பலப்படுத்திக் கொண்டிருக்கிறது.

அரசு கூட இம்முறை வரவு செலவுத்திட்டத்தில் கூடுதலான வீதம் இராணுவத் தேவைக்காக நிதி ஒதுக்கியுள்ளது. இது வரவு செலவில் 12·6 வீதமான நிதி ஒதுக்கீடாகும்.

எமது பிரச்சினைகளை சந்திரிகா அரசு மிகவும் நுணுக்கமாக ஆராய்ந்து தீர்க்கும் என்று எதிர்பார்த்து காத்திருந்தோம்.

ஆட்சிப் பீடம் ஏறிய காலத்திலே தமிழர்களுடைய பிரச்சினையை தீர்க்க வேண்டும் என்பதற்காக பொருளாதாரத் தடைதளர்வு போன்ற நடவடிக்கைகளை எடுப்பதாக வெளிப்படையாக அறிவிக்கப்பட்டது. ஆனால் ஒன்றுமே செயலிலே நடந்ததாக இல்லை.

எல்லாம் பத்திரிகைகளில் அறிக்கையாககவும் அவர்களுடைய விளம்பரமாகவும் பிரசார யுக்தியாகவும் இருந்தது.

ஆனால் எமது மக்களுக்கான எந்தவொரு தீர்வுமே இங்கு வைக்கப்படவில்லை. எமது மக்களினுடைய அடிப்படைப் பிரச்சினைகள் எதுவுமே தீர்க்கப்படவில்லைபல பொருள்களின் தடை நீக்கப்பட்டு இங்கு கொண்டு வரலாம். மக்களின் பாவனைக்கு விடுகின்றோம் என்று கூறிய அரசு ஒரு சில நாட்கள் ஒரு சொற்பமான பொருள்களை மட்டுமே விட்டது. இப்பொழுது முழுமையாக அவர்களினுடைய இராணுவத்தால் வவுனியாவில் வைத்து தடுக்கப்பட்டு வருகின்றது.

ஆகவே இன்று பொருளாதாரத்தடை தளர்த்தப்படவில்லை மக்களுக்கான அடிப்படைத்தேவைகள் நிறைவேற்றப்படும் என முதற்கட்டப் பேச்சுவார்த்தையில் சந்திரிகா அம்மையாருடைய பிரதிநிதிகள் எம்மிடம் தெரிவித்தார்கள். அதாவது இன்று எமது மக்கள் எதிர்நோக்குகின்ற அடிப்படைப் பிரச்சினைகளை ஒரு சில கிழமைகளிலே தீர்ப்போம் மக்களுக்கான மின்சாரவசதியை ஏற்படுத்துவோம் போக்குவரத்துப் பாதை ஒன்றினை உருவாக்குவோம் என்று பல உறுதிமொழிகளை அறிவித்திருந்தார்கள்.

இன்று அவர்கள் பேச்சுவார்த்தைகள் நடாத்தி பல வாரங்கள் மாதமாகவே மாறிவிட்டன. இங்கே எமது மக்களினுடைய எந்தவொரு பிரச்சினையும் தீர்க்கப்படவில்லை.

சந்திரிகா அரசு பதவி ஏற்றபொழுதே முதல் நல்லெண்ண நடவடிக்கையாக எமது தேசியத் தலைவர் அவர்கள் பல நடவடிக்கைகளை எடுத்தார். முதலிலே பேச்சுவார்த்தை மூலமாக எமது பிரச்சினையை தீர்க்க வேண்டும் அதைநாம்வரவேற்கின்றோம் அதற்கு நாம் ஆயத்தமாக இருக்கின்றோம் என பலதடவைகள் எமது தேசியத் தலைவர் அறிவித்திருந்தார்.

யுத்தமின்றி அழிவின்றி தீர்வொன்று வருமானால் அதை மகிழ்ச்சியோடு வரவேற்பவர்கள் நாங்களாகத்தான் இருப்போம். ஏனென்றால் எமது மக்கள் இங்கே நிம்மதியாக நிரந்தரமான ஒரு சூழ்நிலையிலே சுதந்திரமான நிலையிலே இங்கே வாழவேண்டும் என்பதைத்தான் நாம் விரும்புகின்றோம்.

சமாதானம் சமாதானம் என்று சொல்லப்படுகின்றநேரங்களிலெல்லாம் எங்களுடைய கடந்தகால வரலாறுகளை, நிகழ்வுகளை எண்ணிப் பார்க்கவேண்டும். கடந்தகால வரலாறுகளும் நிகழ்வுகளும்தான் இன்றைய போராட்டத்தின் உச்ச நிலையை உருவாக்கியது. கடந்தகால வரலாறுகளில், பாடங்களில் இருந்து உருவானவரே எமது தேசியத் தலைவர்.

கடந்த காலங்களிலே இற்றைக்கு நானூறு வருடங்களுக்கு முற்பட்ட காலத்திலே எமது இனம் அனேகமாக ஏமாற்றப்பட்டு நசுக்கப்பட்டு அழிந்துகொண்டுதான் இருந்தது. எங்களுடைய வரலாறு கற்றுத்தந்த பாடம் அதுதான்.

இன்று ஆட்சிபீடம் ஏறியிருக்கும் சந்திரிகா அரசின் கட்சியினுடைய ஆட்சிக் காலத்தில்தான் நாங்கள் பல நெருக்கடிகளை சந்தித்தோம். அவருடைய தந்தையார் தமிழ் மக்களுக்கான உரிமைகள் வழங்கப்படுவதற்கான ஒப்பந்தமொன்றை கைச்சாத்திட்ட வேளையிலே சிங்கள பெரும்பான்மை இவ வாதம் துள்ளி எழுந்து அதை நசுக்க முற்பட்டது. தமிழ்மக்களுக்கு எதிரான பல சட்டதிட்டங்களை அன்று உருவாக்கினார்கள்.

எனவே ஒன்றைமட்டும் நாங்கள் உறுதியாக நம்ப வேண்டும். நாம் விழிப்பாகவும் உறுதியோடும் இருக்கவேண்டும். எந்தச் சூழ்நிலையில் எந்தச் சக்திகள் வந்தாலும் எம்மை நசுக்கவோ அழிக்கவோ முற்படாதவண்ணம் எம்மை நாம் பலப்படுத்திக் கொள்ளவேண்டும். 1948 ஆம் ஆண்டு இலங்கை சுதந்திரமடைந்தபின் எத்தனையோ நெருக்கடிகள், அழிவுகளை காலம் காலமாக நாம் சந்தித்துவந்துள்ளோம்.

ஆரம்ப காலங்களிலே கூனிக் குறுகி ஒளித்துத் திரிந்த காலத்தை விட்டு உலக அரங்கிலே தலை நிமிர்ந்து நிற்கக்கூடிய அளவிற்கு எமது போராட்டத்தை முன்னெடுத்துச் சென்ற எமது தேசியத் தலைவரின் வழிகாட்டலிலே பல தியாகங்கள் அர்ப்பணிப்புக்களை செய்த மாவீரர்களை நாங்கள் நினைவு கூர வேண்டும்.

இந்த நாளிலே ஒன்றை நாம் உறுதிஎடுத்துக் கொள்ள வேண்டும். எமது மக்களாகிய நீங்கள் அனைவரும் எமது தேசியத் தலைவரின் கரத்தைப் பலப்படுத்தி நாம் உறுதியோடும் ஒன்றிணைந்தும் நின்று எமது உரிமைகளை வென்றெடுக்க வேண்டும் என்றார்.

ஐக்கிய தேசிய கட்சி செயற்குழுவில்

# இ.தொ.கா.எம்.பி.கள் மீது நடவடிக்கை பற்றி ஆராய்வு

(கொழும்பு)
பொதுஜன ஐக்கிய முன்னணி அரசாங்கத்தின் இடைக்கால வரவு செலவுத் திட்டம், கடந்த வெள்ளிக் கிழமை பாராளுமன்றத்தில் வாக்கெடுப்பிற்கு விடப்பட்ட போது அதனை ஆதரித்து வாக்களித்தமைக்காக இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் பாராளுமன்ற உறுப்பினர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.

ஐக்கிய தேசியக்கட்சி பாராளுமன்றக் குழுவின் தீர்மானத்திற்கு எதிரான செயற்பாடு இது எனவும் இது குறித்து எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் குறித்து இன்று காலை கூடவிருக்கும் ஐ.தே.க செயற்குழுக் கூட்டத்தில் ஆராயப்படும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

மேலும் கட்சியின் கொள்கைகளுக்கு முரணாகச் செயற்பட்டு ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட்ட ஐ.தே.க அங்கத்தவர்கள் இருவருக்கு எதிராக மேற் கொள்ளப்பட வேண்டிய ஒழுங்கு நடவடிக்கை குறித்து செயற்குழுக் கூட்டத்தில் ஆராயப்படும் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

# பாடசாலைகளுக்கிடையிலான உதைபந்தாட்ட இறுதிப்போட்டி

யாழ். மாவட்டப் பாடசாலைகள் விளையாட்டு அபிவிருத்திக்குழு நடத்தும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் 17வயதுப் பிரிவு இறுதிப் போட்டி இன்றுபிற்பகல் 1.30 மணிக்கு யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில் பிரதிக் கல்விப் பணிப்பாளர் திரு. இ. சிவானந்தன் தலைமையில் நடைபெறும்.

மூன்றாம் இடத்திற்காக மானிப்பாய் இந்து எதிர் அருணோதயாவும்இறுதிப் போட்டியில்உரும்பராய் இந்து எதிர் புனித ஹென்றியரசர்கல்லூரியும் மோதும்.

இந் நிகழ்ச்சியில் பிரதம விருந்தினராக வைத்திய கலாநிதி ரி. டபிள்யூ. ஜெயக்குலராஜாவும் சிறப்பு விருந்தினராக தமிழீழ நிர்வாகப் பொறுப்பாளர் திரு. ச. டொமினிக்கும் கலந்துகொள்கிறார்கள். திருமதி சி. ஜி. ஜெயக்குலராஜா பரிசில்களை வழங்குவார்.

முதல் இடம்பெறும் அணி தமிழீழ விடுதலைப் புலிகள் மாணவர் அமைப்பு வழங்கும் மறைந்த கிளிநொச்சி மாவட்ட மாணவர் அமைப்புப் பொறுப்பாளர் மாவீரன் கி. ராஜேந்தர் நினைவுச் சுற்றுக் கிண்ணத்தைப் பெறும்.

## மாவீரர்

நடைகள் கூட்ட மைதானத்தை அடைந்ததும் அங்கு மைதான அணி நடையைத் தொடர்ந்து மாவீரர் நாள் பொதுக் கூட்டமும் அதனைத் தொடர்ந்து கலை நிகழ்ச்சிகளும் இடம்பெற்றன

இம் மாவீரர் நாள் நிகழ்வுகளில்பல்லாயிரக்கணக்கான மக்கள்கலந்து கொண்டு அஞ்சலி செலுத்தினர்.

## எறிகணை வீச்சு

வடமராட்சி கிழக்கு வெற்றிலைக் கேணி சிறிலங்கா இராணுவ முகாமில் இருந்து குடியிருப்புகள் நோக்கி ஏவப்பட்ட பல ஆட்லறி ஷெல்கள் வத்தராயன் பகுதியில் கடந்தவியாழக்கிழமைஇரவு விழுந்து வெடித்தன. பாரிய உயிர்ச் சேதங்கள்எதுவும் ஏற்படவில்லை. (யோ)

## கட்டுநாயக்க வந்த விமானத்தில் குண்டுப்புரளி

(கொழும்பு)

டுபாயிலிருந்து கட்டுநாயக்க விமான நிலையத்திற்குநேற்று மாலை வந்த விமானம் ஒன்றில் குண்டு ஒன்று இருப்பதாகக் கிடைத்த தகவலை அடுத்து விமான நிலையத்தில் பெரும் பரபரப்பு ஏற்பட்டது.

குண்டுப் பரிசோதனை நடத்தும் படையினர் அவசரமாக அழைக்கப்பட்டு சோதனையிலீடுபடுத் தப்பட்டனர். விமான நிலையம் வந்திருந்த பயணிகள் யாவரும் பாதுகாப்புக்கருதி ஒதுக்குப்புறமாக நிறுத்தப்பட்டனர். சோதனைகள் பல மணிநேரம் நடைபெற்றன. ஆனால் எதுவித தடயங்களும் கிடைக்கவில்லை.



யாழ். மருத்துவபீட மைதானத்தில் நேற்று நடைபெற்ற மாவீரர் நாள் அணிவகுப்பு நிகழ்வினை பார்வையிட குழுமி நின்ற மக்களில்ஒருபகுதியினரை முதலாவது படத்திலும் விடுதலைப் புலிகளின் படையணிகள் அணிவகுத்து வருவதை இரண்டாவது படத்திலும் காணலாம்.

# மக்களின் துயரைக் களையவே மாவீரர்கள் களம் புகுந்தனர்

### மகளிர் அமைப்பு அரசியற்துறைப் பொறுப்பாளர்

(யாழ்ப்பாணம்)

சமீபத்தில் கப்பல் ஒன்றைத் தகர்த்த லெப். கேணல் நளாயினி, வீரச்சாவடைவதற்கு முன் தனது தாயாருக்கு எழுதிய கடிதத்தில், 'அம்மா உனதுசோகம் எனக்குத் தெரிகின்றது. ஆனால் உன் சோகத்தைவிட எங்களுடைய மக்களின் முகங்களில் கவிந்துள்ள சோகம் தான் என் மனதை உருக்குகின்றது. எனவே நான் இவர்களுக்கு விடிவைப் பெற்றுக்கொடுப்பதற்காக எனது இறுக்கமான முடிவை எடுத்திருக்கின்றேன்' என்று எழுதியிருந்தார்.

யாழ். பல்கலைக்கழக மருத்துவபீட மைதானத்தில் நடைபெற்ற மாவீரர் தினக் கூட்டத்தில் கலந்து கொண்டு பேசும்போதுமகளிர்அமைப்பு அரசியற்துறைப் பொறுப்பாளர் செல்வி ரதி மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அங்கு அவர் தொடர்ந்து பேசும்போது, இதே நேரம் கரும்புலியாகச் செல்வதற்கு முன் ஒருவர் தன் நண்பனுக்கு கடிதம் எழுதுகின்றார்.

நான் எனது தலைவருக்கு கடிதம் எழுத முடியவில்லை. ஏனெனில் தலைவருக்கு நிறையவே வேலைகள் இருக்கின்றன. நான் தலைவருடன் இருக்கும்போது தலைவர் எங்களுடைய மக்களைப்பற்றி எமது மக்கள்படும் கஷ்டங்கள் பற்றி தினம் தினம் கூறும் போது எனது உள்ளம் நொதிக்கும்.

இதனாலேயே நான் கரும்புலியாவதற்கு முடிவெடுத்தேன் என்று. இப்படித்தான் ஒவ்வொரு மாவீரரும் தாம் இருக்கும்போது மக்கள் படும் கஷ்டங்களை உணர்ந்து இவர்களுக்கு உரிமைபெற்றுக் கொடுக்கவேண்டும், எமது மண்ணையும், மக்களையும் காப்பாற்றவேண்டும் என போராடப் புறப்படுகின்றனர் என்றார். (தி),(பா),(சி),(இ)

அடுத்தவாரம் வெளிவிவகார அமைச்சர் இந்தியா பயணம்

# கதிர்காமர்-ராவ் சந்திப்பின் பின்பே புலிகளுடனான பேச்சு குறித்து முடிவு

(கொழும்பு)

இந்தியப் பிரதமர் நரசிம்மராவுடன் பேச்சுக்களை நடத்துவதற்காக சிறிலங்காவின் வெளியுறவு அமைச்சர் லக்ஷ்மன்கதிர்காமர் அடுத்தவாரம் இந்தியா செல்லவுள்ளார் எனவும் இதற்குப் பின்னரே விடுதலைப் புலிகளுடன் அடுத்த கட்டப் பேச்சுவார்த்தைக்கான திகதி நிர்ணயிக்கப்படும் என ''சண்டே லீடர்'' ஆங்கில வார இதழ் செய்தி வெளியிட்டுள்ளது.

டிசம்பர் ஆறாம் திகதியிலிருந்து ஒன்பதாம் திகதிவரையான நான்குநாள் இந்திய விஜயத்தின் போது லக்ஷ்மன் கதிர்காமர் இனப்பிரச்சினைத் தீர்விற்கு சிறிலங்கா அரசு மேற்கொள்ளும் நடவடிக்கைகளைப் பற்றி இந்தியப் பிரதமருக்குவிளக்குவார்.

விடுதலைப் புலிகளின் இலக்குப் பற்றியும், அதன் தலைவர் பிரபாகரன் பற்றியும் இந்திய அரசின் நிலைப்பாட்டை இந்தியப் பிரதமர் சிறிலங்காவின் புதிய அரசிற்குத் தெளிவுபடுத்துவார்.

விடுதலைப் புலிகளுடனான அரசின் சமாதானப் பேச்சுவார்த்தைக்கான திகதி சிறிலங்கா - இந்திய பேச்சுவார்த்தையின் பின்னரே தீர்மானிக்கப்படும்.

இனப்பிரச்சினையில் தற்போதைய சிறிலங்கா அரசின் நிலைப்பாட்டை இந்திய அரசின் எதிர்க்கட்சி உறுப்பினர்களுக்கு சிறிலங்கா வெளிவிவகார அமைச்சர் விளக்குவார் என மேலும் தெரிவிக்கப்படுகிறது.

# தமிழர் எவ்வாறு வாழ்வதென்பதை சிங்களவர் தீர்மானிக்க முடியாது

### -காவல்துறைப் பொறுப்பாளர் நடேசன்


தமிழ் மக்களும், தமிழ் தேசமும் எவ்வாறு வாழ வேண்டும். எவ்வாறு இருக்க வேண்டும் என்பதை தமிழ் மக்கள் தான் தீர்மானிக்க வேண்டும். அதை சிங்கள அரசோ சிங்கள மக்களோ தீர்மானிக்க முடியாது.

இவ்வாறு நேற்று யாழ். பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற மாவீரர் நாள் நினைவுக் கூட்டத்தில் தமிழீழ காவல்துறை பொறுப்பாளர் பா. நடேசன் தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து உரை நிகழ்த்துகையில், இராணுவ அடக்குமுறை எம்மீது ஏவி விடப்பட்டுள்ளது. எமது மக்கள் பல்லாயிரக் கணக்கில் கொன்று குவிக்கப்பட்டுள்ளனர். அகதிகளாக்கப்பட்டுள்ளனர். எமது மக்கள் அந்நியர் படை முகாம்களில் இன்றும் வாடிக்கொண்டிருக்கின்றனர். இவ்வாறு நாம் கொடியதொரு இன ஒடுக்குமுறைக்கு எதிராக முகம் கொடுக்கின்றோம்.

இந்திய அரசு இதை நன்றாக உணர வேண்டும். அது மாத்திரமல்ல இங்கே ஈழத் தமிழினம் ஆயுதம் தாங்கி விடுதலைப் போராட்டத்தை நடத்தாவிட்டால் எமதுமக்களும் நாங்களும் முற்றாக அழிக்கப்படுவோம். இன்று ஈழத் தமிழர்களிற்கு வரலாற்று ரீதியான நிர்ப்பந்தம் திணிக்கப்பட்டுள்ளது. நாம் ஆயுதம் தூக்கி போராடாவிட்டால் எமக்கு வாழ்வு இல்லை. இதனை இந்திய அரசு நன்றாகப்புரிந்து எமது போராட்டத்தினை அங்கீகரிக்க வேண்டும். அதுமாத்திரமல்ல எமது விடுதலைப் போராட்டத்தை இந்தியாவிலுள்ள பிரிவினைவாதிகளுடன் ஒப்பிட்டுப் பார்த்து அது தனது தேசிய நலனிற்கு குந்தகம் என நினைப்பது தவறான அரசியல் மதிப்பீடு ஆகும்.

இந்திய உபகண்டத்தில் வரலாற்று ரீதியான எமது போராட்டத்தை அங்கீகரிப்பதன் மூலம் இந்தியாவின் நண்பனாக இருப்போமானால் இது இந்தியாவின் வெளியுறவுக் கொள்கைக்குக் கிடைத்த வெற்றியாகும். ஆகவே இச் சந்தர்ப்பத்தில் எமது மக்களின் அபிலாசைகளையும் எமது போராட்டத்தையும் அங்கீகரிக்க முன்வரவேண்டும் என்றார்.



நேற்று நடைபெற்ற மாவீரர்நாள் அணிநடையில் கலந்து கொண்ட காந்தரூபன் அறிவுச்சோலை மாணவர்கள்

## வீரச்சாவு



கப்டன் லதன்

(யாழ்ப்பாணம்)

மட்டக்களப்பு மாவட்டம் கொழுத்திமடு என்ற இடத்தில் கடந்த 22ம் திகதி காலை 10.00 மணியளவில் சிறிலங்கா இராணுவத்தினர் பதுங்கியிருந்து தாக்கியதில் விடுதலைப்புலிகள் போராளி ஒருவரும் முழுநேர ஆதரவாளர். ஒருவரும் வீரச்சாவடைந்தனர்.

ஃ கப்டன் லதன்(சபாபதிப் பிள்ளை சத்தியமூர்த்தி, மட்டக்களப்பு) என்னும் போராளியும்.

ஃ ஆதரவாளர் திருமால் (மட்டக்களப்பு) என்பவருமே வீரச்சாவு அடைந்தவர்களாவர் இவர்களுக்கு தமிழீழ விடுதலைப் புலிகள் வீரவணக்கம் செலுத்துகின்றனர்.

# சமாதானம் என்ற போர்வையில் அரசு போராட்டத்தை நசுக்க எண்ணுகிறது

### -பாலகுமாரன்

(யாழ்ப்பாணம்)

தமிழ் மக்களது அமைதி நிலையை குழப்பியவர்கள் இன்று குழம்பிப்போய் உள்ளனர். மாவீரரது தியாகத்தினால் இன்று சிங்கள அரசின் திட்டங்கள் உடைத்தெறியப்பட்டுள்ளன. இதனால் என்ன செய்வதென்று தெரியாத சிங்கள அரசு தமது அரசியல் இலாபம் கருதி சமாதானம் என்ற போர்வையில் எமது போராட்டத்தை நசுக்க எண்ணுகிறது. இவ்வாறு நேற்று யாழ். பல்கலைக்கழக மருத்துவபீட மைதானத்தில் நடைபெற்ற மாவீரர் நாள் நினைவுக் கூட்டத்தில் உரை நிகழ்த்துகையில் தமிழீழ 'விடுதலைப்புலிகளின் உறுப்பினர் வே. பாலகுமாரன் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், 40 ஆண்டு காலமாக எமது இனத்தை அழிக்கத் திட்டம் போட்டவர்களின் திட்டங்கள் எல்லாம் 20 வருட போராட்டங்களின் பின்னர் சிதறடிக்கப்பட்டு குழப்பப்பட்டு, அத்திட்டங்கள் யாவும் மாற்றப்பட்டு ஒரு புதிய சூழ்நிலை ஒன்று இன்று பிறந்துள்ளது. இன்று அவர்கள் குழம்புகின்றார்கள். எங்களது மக்களினது துன்பங்கள், சோகங்கள், கஷ்டங்கள் இருந்தபோதிலும் இன்று தெளிவான அரசியல் பரிமாணத்தைப் பெற்றுவிட்டார்கள்.

இம்முறை மாவீரர் நிகழ்வானது மிகவும் வித்தியாசமானது. ஒரு முறையும் நாங்கள் இவ்வாறான நிகழ்வைக் காணவில்லை எங்கு சென்றாலும் மக்களும் போராளிகளும் வேறுபாடின்றி பல இடங்களில் மக்களே பொறுப்பாளர்களாகமாறி இந்த நிகழ்வை தங்களுடைய நிகழ்வாக நடத்தி முடித்திருக்கின்றார்கள். அந்த வகையில் இது முக்கியமானது நடந்தவற்றில் வேறுபட்டதுமான பரிமாணத்தை இது கொண்டிருக்கின்றது. எங்களது வாழ்விலே ஒரு புது விழுமியமாக இந்த மாவீரர் நிகழ்வு தொடரப்போகிறது. என்றார். (இ),(பா)

## உதைபந்தாட்டம்

யாழ். மாவட்டப் பாடசாலைகள் விளையாட்டு அபிவிருத்திக்குழு நடத்தும் உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியில் இன்று காலை 8 மணிக்கு யாழ். மத்திய கல்லூரியில் 19 வயதுப்பிரிவில் நாவாந்துறை றோ.க. எதிர் கொக்குவில் இந்துவும், புனித சார்ள்ஸ் எதிர் ஹென்றியரசர் கல்லூரியும் விளையாடும். அதேநேரம், யாழ் இந்து மைதானத்தில் 15 வயதுப் பிரிவு அரை இறுதிப்போட்டிகள் - உரும்பிராய் இந்து எதிர் சண்டிலிப்பாய் இந்து மகாவித்தியாலயமும் ஏழாலை ஸ்ரீ முருகன் எதிர் நாவாந்துறை றோ.க.வும் விளையாடும்.

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 31 ஆம் இலக்கத்திலுள்ள ஈழநாதம் பணிமனையில் 1994ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 28ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது

# தேசியக் கொடி ஏற்றலுடன் ஆரம்பித்த மைதான நிகழ்வுகள்

யாழ்.பல்கலைக்கழக மருத்துவ பீட மைதானத்தில் நேற்று மாலை 4.00 மணியளவில் யாழ் மாவட்ட சிறப்புத்தளபதி திரு. செல்வராசா தேசியக்கொடியேற்றி வைக்க மாவீரர் நாள் மைதான நிகழ்வுகள் ஆரம்பமாகின.

தேசியக்கொடி ஏற்றப்பட்டு சில நிமிட நேரங்களில் அணிவகுப்புகள் மைதானத்தினுள் நுழையத்தொடங்கின முதலில் விடுதலைப் புலிகள் தரைப்படையணியும், அதனையடுத்து கடற்புலிகள் படையணியும், அடுத்ததாக தமிழீழ காவல்துறை அணியும், பாண்ட் இசை சகிதம் மைதானத்திற்குள் அணிவகுத்து வந்தன.

இவ் அணிகளையடுத்துகாந்தரூபன் அறிவுச்சோலைமாணவரணியும், அடுத்து விடுதலைப்புலிகள் மாணவரமைப்பு அணியும், அடுத்து பாடசாலைகள் அணியும் பாண்ட் வாத்திய இசை முழங்க அணிவகுத்து வந்தன.

இவ் அணிநடைகளைத் தொடர்ந்து நடைபெற்றவிடுதலைப்புலிகள்தரைப் படையணியினரின் மைதான அணிநடையும், கடற்புலிகள் அணியின் மைதான அணிநடையும் மக்கள் மனங்களைகொள்ளை கொண்டன. இதனைத் தொடர்ந்து இடம்பெற்ற காவல் துறையினரின் பாண்ட் வாத்தியக் குழுவினரின் அணிநடையும், பாண்ட் வாத்திய இசை நிகழ்வும் மிகவும் சிறப்பாக அமைந்திருந்தன.

இம் மூன்று நிகழ்வுகளும் ஒவ்வொன்றும் சரியாக 15 நிமிடங்கள் இடம்பெற்று 5 மணி 15 நிமிடமளவில் மைதான அணிநடை நிகழ்வுகள் நிறைவுற்றன.

## புலிக்கொடி

மாணவர் அமைப்பினர் பெண்கள்-ஆண்கள் என இரு தனித்தனி குழுக்களாக அணிவகுப்பில் ஈடுபட்டனர்.

இலுப்பையடிச் சந்தியில் இந்த நிகழ்வு ஆரம்பமான போது இதைக் காண்பதற்காக ஆயிரக்கணக்கான பொது மக்கள் திரண்டு வந்து ஆர்வத்துடன் பார்வையிட்டனர்.

இந்த அணிவகுப்பு குழுக்கள ஒவ்வொன்றும் தனித்தனியான பாண்ட் வாத்திய இசைக்குழுக்களைக் கொண்டிருந்தன.

3.35 மணிக்கு ஆரம்பமான இந்த அணிவகுப்பு கிட்டத்தட்ட ஒரு மணி நேரத்தில் மருத்துவப்பீட மைதானத்தைச் சென்றடைந்தது.

# மாவீரர் நாள் அனுஷ்டிக்கும் புலிகளை நிர்ப்பந்திக்கவே இராணுவ நடவடிக்கை

### இராணுவ அதிகாரி தகவல்

மாவீரர் தினத்தை அனுஷ்டித்துவரும் புலிகளுக்கு நிர்ப்பந்தம் கொடுப்பதற்காகவே மட்டக்களப்பில் மட்டுப்படுத்தப்பட்ட அளவிலான இராணுவ நடவடிக்கைகளைத் தாம் ஆரம்பித்துள்ளதாக இராணுவ அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

கடந்த வெள்ளிக்கிழமை முதல் குறிப்பிட்ட பிரதேசங்களில் மட்டுப்படுத்தப்பட்ட அளவிலான தாக்குதல் நடவடிக்கைகளை இராணுவத்தினர் மேற்கொண்டு வருவதாக தெரிவித்த அவ் அதிகாரி தற்போது விடுதலைப்புலிகள் பரந்தளவில் மாவீரர் தினத்தை அனுஷ்டித்து வருவதாகவும், இதில் ஈடுபட்டுள்ள புலிகளுக்கு தாம் நிர்ப்பந்தத்தை கொடுக்கும் முகமாகவே இதனை மேற்கொண்டு வருவதாகவும் குறிப்பிட்டார்.